03rd
March
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 21 | பக்கங்கள் - 17 | editor.uthayam@gmail.com



## வெகு விமரிசையாக நடைபெற்ற மொகிதீனின் வரலாற்று ஆய்வரங்கு

16ம் பக்கம்பார்க்க...

# பாகிஸ்தான் பிரதமராக ஷெபாஸ் நாளை பதவியேற்பு



## முஸ்லிம் லீக், மக்கள் கட்சி இணைந்து கூட்டாட்சி

பெப்ரவரி 8 ஆம் திகதி நடைபெற்ற பாகிஸ்தான் தேர்தல் முடிவுகளின் படி பாகிஸ்தானின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் செபாஷ் செரீப் பதவியேற்கவுள்ளார்.

72 வயதை உடைய செபாஷ் செரீப் பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை பிரதமராக

02ம் பக்கம்பார்க்க...

## இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் மகே கதாவ நூல் வெளியீடு



இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதிய "மகே கதாவ" எனும் சிங்கள

02ம் பக்கம்பார்க்க...

## காத்தான்குடியில் கைதானோருக்கு பயங்கரவாத தொடர்பு இல்லை

### 30 பேரும் பிணையில் விடுதலை

காத்தான்குடியில் சந்தேகத்தின் பேரில் கைது

02ம் பக்கம்பார்க்க...

## ஹூதிகள் மீது தாக்குதல் கஜபா கப்பலும் இணைவு



செங்கடலில் ட்ரோன் தாக்குதல் நடத்தும் ஹூதி கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிர் தாக்குதலை

02ம் பக்கம்பார்க்க...

## மீனவ பிரச்சினைக்கு தீர்வு காண இரு நாட்டு தலைமைகள் விவாதிக்க வேண்டும்

### சென்னை விமான நிலையத்தில் ஹக்கீம் பேட்டி



மறைந்த கவிமணி கா.அப்துல் கபூர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக சனிக்கிழமை காலை சென்னைக்கு வருகை தந்த ஸ்ரீலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்

02ம் பக்கம்பார்க்க...

## கடும் வெப்ப நிலையால் நீரிழப்பு ஏற்படும் அபாயம்

- நரம்பு மண்டல செயற்பாடும் குறைவடையலாம்
- வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பநிலை உணரப்படுவதால் மனித உடலில் நீரிழப்பு ஏற்படலாம் என வழிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இன்றைய வெப்பநிலையானது, எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிகளவில்

02ம் பக்கம்பார்க்க...

## எம்முடன் 40பேர் இணைவு, நாம் ஆடப்போவது தோற்பதற்கல்ல



### நாமல் அதிரடி கருத்து

முதலீடுகள் என்ற பெயரில் தேசிய வளங்கள் விற்கப்படுவதை

02ம் பக்கம்பார்க்க

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## பாகிஸ்தான்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பணி புரிந்தவராவார்.மார்ச் 4 ஆம் திகதி புதிய பிரதமர் பாகிஸ்தானில் பதவியேற்கவுள்ளார்.

நடைபெற்ற சர்ச்சைக்குரிய பொது தேர்தலில் இம்ரான்கானின் கட்சி கூடுதலான ஆசனங்களை வென்ற போதும் தேர்தலில் இடம்பெற்ற மோசடி காரணமாக அவை மறைக்கப்பட்டன.

இப்பின்னணியில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் பூட்டோவின் மக்கள் கட்சியும் இணைந்து ஆட்சி அமைக்க தீர்மானித்துள்ளன. இதன் படி செபாஷ் செரீப் புதிய பிரதமராக நாளை திங்கட்கிழமை பதவியேற்கவுள்ளார்.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஷெபாஸ் ஷெரீப் 201 வாக்குகளையும் அவரை எதிர்த்து போட்டியிட்ட இம்ரான் கான் கட்சி ஆதரவு வேட்பாளர் ஒமர் ஐயூப் கான் 92 வாக்குகளையும் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட 30 பேருக்கும் பயங்கரவாத தொடர்பு இல்லை என்பதால் கைது செய்யப்பட்ட மறுதினம் மட்டக்களப்பு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

காத்தான்குடியில் வழமையாக பொழுதுபோக்காக 304 விளையாடிக்கொண்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை தினமாகும்.எனவே அப்பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களும் அங்கு பணிபுரிபவர்களும் பொழுது போக்குக்காக பல வருடங்களாக இவ்விடத்தில் கூடி விளையாடி வருகின்றனர்.

அதேபோல வியாழன் இரவு இவ்விளையாட்டில் அவர்கள் ஈடுபட்ட போது காத்தான்குடி பொலிசாருக்கு கிடைத்த தகவலின்படி இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு பதில் நீதவான் ஞு .தியாகேஸ்வரன் இவர்களை தலா ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிடுத்துள்ளார்.சில ஊடகங்கள் இச்செய்தியினை பயங்கரவாதிகள் போன்று வெளிக்காட்டி இருந்தமை பற்றி காத்தான்குடி பிரமுகர்கள் பலர் கவலை தெரிவித்திருந்தனர்.

சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்புடையவர் என கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒருவரும் இந்த 30 பேரில் இருந்துள்ளார். இது தொடர்பான வழக்கினை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

## மீனவ...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சார்பாக திருச்சி ஊடகவியலாளர் ஷ ாகுல் ஹமீது சால்வை அணி வித்து வரவேற்றார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு ரவூப் ஹக்கீம் அளித்த பேட்டி வருமாறு:

இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்க ளுடைய நூற்றாண்டு விழா சென்னையில் கோலா கலமாக நடத்த

விருக்கிறார்கள். அந்த நிகழ்வில் பிரதம பேச் சாளராக கலந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பு வந்ததில் இங்கு வந்திருக்கிறேன்.

மீனவர் பிரச்சனை உண்மையில் கவலைக்குரிய விஷயம்தான். இருந்தாலும் எங்கள் நாட்டு மீனவர்கள் அடிக்கடி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். தங்களுடைய பிரதேசத்தின் மீன்வளங்கள் சூறையாடப்படுகிறது என்று அரசுக்கு அழுத்தம் கொடுக் கிறார்கள். இதன் நிமித்தமாக அடிக்கடி இப்படி கைது நடவடிக்கைகள் நடைபெறு வது சர்வசாதாரணமாக இருப் பது எங்களுக்கும் கவலை தருகிறது. நான் இவற்றை சுமூகமாக தீர்த்துக் கொள்வதற்கு இருதரப்பிலும் மீனவ சமூகத்தின் தலைமைகள் கூடி விவாதிப்பது நல்லது. அதற்கான ஏற்பாடுகளை இலங்கை இந்திய அரசுகள் செய்யும் என்பதை நாங்கள் எதிர்ப்பார்கிறோம்.

நாங்கள் பாராளுமன்றத்தில் பலமாக இருக்கிறோம். இந்த வருடத்தில் அதிபர் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதுக்கு அப்புறம் தான் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் நடக்கும். முதலில் எந்த தேர்தல் நடத்தப்படும் என்று தெரியவில்லை. முதலில் எதுவும் வரலாம் எந்த தேர்தல் வந்தாலும் நாங்கள் வெற்றி பெற்று பலமான ஆட்சியை அமைப்போம் அதில் எந்த மாற்றமும் கிடையாது இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் சனிக்கிழமை மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சென்னையில் தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு இல்லத்தில் சந்தித்து பேசினார்.

இலங்கையில் உள்ள கோயில்களை சுற்றி பார்த்து ரவூப் ஹக்கீம் அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை ஏற்று விரைவில் வருவதாகவும் கூறினார். இந்த சந்திப்பின் போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மகளிர் அணி தேசிய தலைவி பாத்திமா முஸ்ப்பர், ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஹூதிகள்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கு இலங்கை கடற்படையுடன் கஜபா கப்பலும் இணைந்திருப்பதாக இலங்கையின் அமெரிக்கா தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை தெரிவித்துள்ள அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பங்கு பற்றி இருந்தார்.பாத் பைன்டர் அமைப்பு நடத்திய கருத்தரங்கிலே இவர் அதனை தெரிவித்தார்.

இஸ்ரேல் பலஸ்தீனத்தில் மேற்கொண்டு வரும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களுக்கு எதிராக ஹூதி கிளர்ச்சி படையினர் தென்னாசியாவை நோக்கி செல்லும் வர்த்தக கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதனால் அவற்றை எதிர்கொள்வதற்காக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் பல இணைந்து செயற்பட்டு வருகின்றன.

பிரான்ஸ் ,ஜேர்மனி உட்பட நேட்டோ நாடுள் அந்தப் படையை சேர்வதற்கு அமெரிக்காவினால் இணங்க வைக்க முடியவில்லை

அணிசேரா இயக்க நாடான இலங்கை தமது அணிசேரா கொள்கையை மீறி அமெரிக்க படையுடன் இணைந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.மகா பராக்கிரமபாகு மன்னருக்கு பிறகு முதன்முறையாக எகிப்து கடலுக்கு தனது ஆட்சியிலே படைகளை அனுப்பியதாக ஜனாதிபதி தெரிவித்ததாக மவ்பிம பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

## எம்முடன்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாம் எதிர்க்கின்றோம் என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விரைவில் இது தொடர்பாக அரசியல் தீர்மானம் ஒன்றினை எடுக்க இருப்பதாகவும் இதேநேரம் நாம் ஆடப்போவது தோல்வியடைவதற்கல்ல என்றும் தெரிவித்தார்.

இதுவரை எம்முடன் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்திருக்கிறார்கள்.

எங்களுடன் இணையாதவர்களுக்கு மொட்டு கட்சியிலிருந்து நியமன பாத்திரம் வழங்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்தார்.

## கடும்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மேல்மாகாணம், வடமேல் மாகாணம், தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் மன்னார் மாவட்டம் போன்ற பிரதேசங்களில் பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதிக வெப்பம் காரணமாக நரம்பு மண்டல செயற்பாடு குறைவடைய கூடிய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளதோடு, நீண்டநேர உடல் உழைப்பு காரணமாக இந்த நிலை ஏற்படலாம் எனவும் சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வெப்பத்தால் உடலில் நீரிழப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக தொடர்ந்தும் தண்ணீர் அருந்துமாறு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுமக்கள் உண்ணும் உணவு மற்றும் பானங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இக் கால கட்டத்தில் அதிகமாக திரவ உணவுகளை உட்கொள்வது மிகவும் அவசியமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இம்தியாஸ்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மொழியிலான வாழ்க்கைச் சரிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 05ம் திகதி பி.ப 3.45 மணிக்கு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரத்ன கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிங்கள மொழியில் வெளியிடப்படவுள்ள இந்நூலானது எதிர்வரும் காலங்களில் தமிழ், ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# “ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/25” இற்கான விண்ணப்பம் கோரல் ஆரம்பம்!

- வலய / மாகாண கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து அதிபர்களுக்கும் விசேட சுற்றறிக்கை

- ஜனாதிபதி நிதிய உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்திலிருந்து விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெறலாம்.

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக ஜானதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் ”ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024ஃ2025”இற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான றறற.கயஉநடிழழம. உழஅஃீசநளனைநவெ.கரனெ மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான றறற.ிசநளனைநவெகரனெ.பழஎ. டம ஊடாக விண்ணப்பத்தையும், அதற்கான அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் மூன்று மொழிகளும் பெற முடியும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.03.2024 திகதிக்கு முன் மாணவர் கல்வி கற்கும் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்வது தொடர்பில் கல்வி அமைச்சு வலயஃமாகாணக் கல்வி அலுவலகங்களுக்கும், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் விசேட சுற்றறிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் வலய மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை அதிபர் தலைமையிலான குழுவினால் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அளவுகோல்களையும், விதிகளையும் கருத்தில் கொண்டு இந்தக் குழுக்கள் தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். மேலும் குழு உறுப்பினர்கள் இந்தச் செயல்பாட்டில் முழு நம்பகத் தன்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது. மேலும், இந்தப் புலமைப் பரிசில் திட்டம் தொடர்பான எந்தவொரு விண்ணப்பமும் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்படக் கூடாது என ஜனாதிபதி நிதியம் வலியுறுத்துகிறது.

பாடசாலைகளால் தெரிவு செய்யப்பட்ட தகுதியான புலமைப்பரிசில் பெறுவோரின் பட்டியல், விண்ணப்பங்கள் மற்றும் விபரங்கள் கல்வி அமைச்சினால் ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பிய பின்னர், இந்த உதவித் தொகைகள் ஏப்ரல் 2024 முதல் அடுத்த 12 மாதங்களுக்கு வழங்கப்படும். இலங்கையிலுள்ள 10,126 பாடசாலைகளை உள்ளடக்கி முதலாம் தரத்திலிருந்து 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் (100,000) மாணவர்களுக்காக இந்த புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த முழுத் திட்டத்திற்காகவும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 3,600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக்குறைந்த வசதிகளுடன் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்குவதும் நாட்டின் மனித வளத்தை மேம்படுத்துவதற்கு முதலீடு செய்வதுமே இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.






(அஷ்ரப் ஏ சமத்)

தெஹிவளை அல் இமாம் அல் அஸ் அரபிக் கல்லூரி ஏற்பாட்டில் ரமலான் வருகையை முன்னிட்டு நிகழ்வு ஒன்று 02.03.2024 வெள்ளவத்தை மெரைன் ரைவில் இடம் பெற்றது கனடாவில் உள்ள சலாஹூடீன் பள்ளிவாசலின் பிரதான இமாம் இஸ்லாமிய பேச்சாளர் அஷ்ஷைக் ஜீல் ஸாதிக் - குழுவினர்களான அஷ்ஷைக் ஸஃீத் - ஹார்மெனி பேன்ட், அல் ஹாஜ் ஹம்ஸா மஹ்ஸூமி முஸ்அத் கரீம் ஆகியோர் இவ் வாரம் இலங்கை வந்திருந்தனர். இவர்களது ஆன்மீக பேச்சும் இடம்பெற்றது அத்துடன் ஸலாவாத் கிராத் மற்றும் , துஆப் பிராத்தனையும் நிகழ்த்தினார்கள்.

இந் நிகழ்வில் முன்னாள் ஆளுனர் அசாத் சாலி கல்லூரி அதிபர் மாணவர்கள் மற்றும் தெஹிவளை வெள்ளவத்தை பேருவளை அழைக்கப்பட்ட அதிதிகளும் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MARCH 03 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ரமழானும், ஸகாத்தும் எமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும்!

இன்னும் சில தினங்களில் உலக வாழ் முஸ்லிம்கள் அருள் நிறைந்த நோன்பினை எதிர்கொள்ள உள்ளனர்.

இதற்காக முழு முஸ்லிம் உலகமும் தயாராகி வருகிறது. வருடா வருடம் எம்மை எதிர்நோக்கி வரும் இஸ்லாத்தில் நான்காவது கடமையான நோன்பு எம்மை அடையும் இவ்வேளை நாம் பாரிய பொருளாதார நெருக்கடியில் வாழும் ஒரு கால கட்டமாகும். சாதாரண மக்கள் அன்றாட வாழ்க்கையைகழிப்பதற்குக்கூடபெரும்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். கொரோனா தொற்று மற்றும் நாட்டில் தொடரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் தமது தொழில் வாய்ப்புகளையும் வருமான வழிகளையும் இழந்து அன்றாட உணவிற்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

விலைவாசி உயர்வு காரணமாக சாதாரண மக்கள் ஒரு வேளை உணவைக்கூட பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். இந்த மக்களின் பசியை போக்குவதற்கு எம்மாளான உதவிகளை செய்வது வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லிம்கள் மீதும் கடமையாக்கும். இஸ்லாத்தின் மூன்றாவது கடமையான சக்காத் சமூகத்தில் வறுமை ஒழிப்பதற்கு இறைவன் தந்துள்ள ஒரு சிறந்த வழிமுறையாகும்.

யுத்தகளத்தில் பலஸ்த்தின படை வீரர்களின் தாக்குதல்களினால் நாளாந்தம் பல இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டாலும் அது வெளிவராத ரகசியமாகவே உள்ளது. உலகில் உள்ள ஊடகங்களைக் கையாளுகின்ற சியோனிஸ வாதிகள் இவைகளை எல்லாம் ரகசியமாக வைத்திருக்கின்றார்கள். ஜனநாயகம், பத்திரிகை சுதந்திரம் என்று வெளியில் பேசுகின்ற இவர்கள் மத்தியில் பத்திரிகை சுதந்திரமும் இல்லை, ஜனநாயகமும் இல்லை. பஞ்சத்தின் மத்தியில் வாழும் பலஸ்தீனர்களுக்கு விடிவு கிடைப்பதற்கு புனித ரமலானில் பிரார்த்திப்பதோடு, இந்த நாடு எதிர்நோக்கி உள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் புனித ரமலானில் பிரார்த்திப்போமாக. நமது அயலில் வாழும் வசதிபடைத்த சகோதர சகோதரிகள் இயன்ற அளவு உதவிகளை செய்வதற்கு முன்வர வேண்டும் என்று எமது வேண்டுகோளை விடுக்கின்றோம்.



இர்பான் இக்பால்



# பேசப்படாத நியாயங்கள்: நீதியும் - நியதியும்!

பரபரப்பான காலப் பகுதிகளிலேயே நாட்டு மற்றும் உலக நடப்புகளைக் கண்டு – கேட்டறிவதற்கு மக்கள் மத்தியில் பாரிய ஆர்வம் காணப்படும். அது உள்நாட்டு இன முறுகல்களாக இருந்தாலும் சரி, சர்வதேச அடக்குமுறை சர்ச்சைகளாக இருந்தாலும் சரி. அந்த வகையில், அண்மைக்காலமாக சமூக வலைத்தளங்களில், அதுவும் இலங்கையில் உள்ள திடீர் செய்தி வித்தகர்களாலும் பெருமளவு ஆர்வமாகப் பேசப்பட்ட விடயம் தற்போதும் தொடரும் பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலிய அடாவடிகள்.

ஒரு காலத்தில் செய்தித்தாள்களே செய்தியைத் தாங்கி வந்தன. அக்காலத்தில், யாரோ தேடி – அலசி வெளியிட்ட செய்தியைத் தமதாகக் காட்டி பரப்புரை செய்பவரைப் பார்த்து, ஏதோ இவரே சைக்கிளில் சென்று தேடியெடுத்த செய்தி போல சொல்கிறார் என வேடிக்கையாகச் சொல்வதுண்டு. அது போலவே, தற்காலத்தில் எக்ஸ் (ஒ) என அறியப்படும் ட்விட்டர் மற்றும் தணிக்கையின்றி செயற்பட அனுமதிப்பதால், மத்திய கிழக்கு நாடுகளில் பாவனையாளர்களைக் கவர்ந்துள்ள டெலிகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் வெளியாகும் பரப்புரைகளை ஊதிப்பெருப்பித்துத் தமிழில் காணொளியாகவும், கதையாகவும் சொல்லிக் கொண்டிருந்த சிலர் இருந்தார்கள், இப்போது சில வாரங்களாக அமைதியாகக் காணப்படுகிறார்கள்.

ஏன்? என்ற கேள்விக்குப் பின்னால் எதனால்? என்ற இன்னொரு கேள்வியும் உண்டு. முதலில் அது தொடர்பிலான மக்கள் ஆர்வம் குறைந்து விட்டால் அதற்குப் பின் தாம் அதற்குச் செலவு செய்யும் நேரத்தில் பிரயோசனமில்லையென்று முடிவெடுத்து விடுகிறார்கள். அத்துடன், முதலில் ஏதோ நடக்கப் போகிறது என்று எகிறியிருந்த எதிர்பார்ப்பு இன்றளவில் 27000க்கு அதிகமான பலஸ்தீன உயிர்களைக் காவு கொண்டதுடன், கட்டிடங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பசி பட்டினியென்ற நிலையை மாத்திரமே பலஸ்தீனர்களுக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ள நிலையில், இதன் விளைவுகள் குறித்த பார்வையின் பக்கமும் சற்றே மாறி வருகிறது என்பதால் பலருக்கும் குழப்பம்.

ஆனால், இதையெல்லாம் தாண்டிய உண்மையெதுவென்றால், பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்படும் தீங்குகள் மனித நேயத்துடன் வாழும் எல்லா மக்களினதும் ஆழ் மனதை உறுத்திக் கொண்டேயிருக்கிறது. குறிப்பாக, அவர்கள் முஸ்லிம்கள் என்பதால், யுக்ரேனியர்களுக்குக் காட்டப்படும் அனுதாபமும் சர்வதேச மனிதநேயமும் பலஸ்தீனர்களுக்குக் காட்டப்படாததனால். அது முஸ்லிம்களிடம் மிக அழுத்தமான உணர்வைத் தூண்டிக் கொண்டேயிருக்கிறது. இந்நிலையின் விளைவுகள் பல விதம். மிகக்குறைந்த அளவில், இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, பலஸ்தீனர்களுக்குப் பணம் அனுப்புவதாகக் கூறி, சமூக வலைத்தள பாவனையாளர்களின் கணக்குகள் கூட அபகரிக்கப்படுகிறது. அதாவது, உணர்வுள்ள மக்கள், ஆகக்குறைந்தது பலஸ்தீனர்களுக்காக பணம் சேர்க்கிறேன், என்னுடைய சேவையை அங்கீகரித்து, கணிப்பீடு நடாத்தும் இணையத்தளம் ஒன்றில் வாக்களித்து ஊக்குவியுங்கள் என்றொரு பிரத்யேக சேதி வரும் போது. இதைக் கூட செய்யாமலா? என்று அங்கு சென்று ஒரு வாக்கைப் பதிவு செய்கிறார்கள். ஆனால், மறு நிமிடமே அவர்களது சமூக வலைத்தள கணக்கு ஹக் செய்யப்படுகிறது.

கடந்த ஒரு மாத்தில் மாத்திரம், நானறித்த வகையில் பத்துக்கு மேற்பட்டோர் இவ்வாறு தமது கணக்குகளை இழந்துள்ளனர். இது மிகவும் சிறிய அளவில், பலஸ்தீன மக்கள் மீதான அனுதாப உணர்வினைப் பயன்படுத்தி இடம்பெறும் மோசடி. மேற்கு நாடுகளில், இவ்விவகாரம் இன்னொரு கட்டத்திலான உணர்வைத் தூண்டியுள்ளது. குறிப்பாக, அது அரசியல் விளைவாக மாறி வருகிறது. அந்த வகையில், ஐக்கிய இராச்சியத்தில் இவ்வாரம் ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு பதிவாகியுள்ளது.

ஜோர்ஜ் கலவே என அறியப்படும் அரசியல்வாதி, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், ஈராக் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்து பகிரங்கமாகக் குரல் கொடுத்ததிலிருந்து மேற்குலக அடக்குமுறையை விரும்பாத எல்லோர் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டார். நாளடைவில் பலஸ்தீன ஆதரவை வெளியிட்டு, அதற்காக பகிரங்கமாகவே செயற்பட்டும், உதாரணமாக பல்கலைக்கழக ஒன்று கூடல் ஒன்றில் பங்கெடுத்த போது, தன்னை ஒரு இஸ்ரேலியர் என அடையாளப்படுத்திய மாணவனுடன் உரையாட மறுத்து, இஸ்ரேல் என்றொரு நாடில்லை, நான் அங்கீகரிக்கவும் போவதில்லையென்று முழங்கியவரும் கூட.

இவ்வாறான தீவிர பலஸ்தீன ஆதரவை வெளிப்படுத்தி வந்த ஜோர்ஜ் கலவே, இவ்வாரம், இங்கிலாந்தின், ரோச்டேல் எனும் இடத்தின் இடைக்கால தேர்தலில் அமோக ஆதரவைப் பெற்று மீண்டும் நடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார். மேற்குலக அரசியலில், பலஸ்தீன விவகாரம் வரையறுக்கப்பட்ட பேச்சோடு இருக்கும் இக்கால கட்டத்தில், அதுவும் ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றில், தனக்கு உரையாடக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாரிய வாதங்களை உருவாக்கும் திறன் ஜோர்ஜிடம் இருக்கிறது, ஆதலால், அதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

எனினும் ஜோர்ஜ் கலவேயின் வெற்றியின் பின்னணியில், முழுக்கவும் முஸ்லிம் உணர்வு அடங்கியிருக்கிறது என்ற எதிர் தரப்பு வாதத்தினையும் மறுக்க முடியாது. காரணம், அவர் வெற்றி பெற்ற ரொச்டேல் பகுதி, பெருமளவு பாகிஸ்தானிய சமூகத்தினரை உள்ளடக்கியுள்ளது. அதனை அண்டியுள்ள பேர்ன்லியில் உள்ள பள்ளிவாசல், மிகப் பெரும் பொருட்செலவில் உருவாக்கப்பட்டு, ஒரு காலத்தில் பேசு பொருளாக இருந்தது. தவிரவும், குட்டி பாகிஸ்தான் என அறியப்படும் பிரட்போர்ட் அருகிலுள்ளது. தவிரவும், வெள்ளையினத்தவர்கள் இழந்து வரும் கலாச்சார பூமியாக வாதிக்கப்பட்டு வரும் மென்சஸ்டர் மாகாணத்திற்குள்ளேயே இப்பகுதிகள் அனைத்தும் அடங்கியுள்ளன. ஆக, இதில் முஸ்லிம் உணர்வு பாரிய பங்களிக்கிறது என்ற வாதத்தை மறுக்க முடியாது.

மறு புறத்தில், சர்வதேச மட்டத்தில், முஸ்லிம் உணர்வுகள் எவ்வாறு அரசியல் பயன்படுகிறது என்பதற்கும் இது ஒரு உதாரணமாகவும், இன்னொரு புறத்தில் ஆபத்தையும் உருவாக்கியுள்ளது. ஏனெனில், ஜோர்ஜ் போன்றவர்களின், முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் கிடைக்கும் வெற்றிகள், தீவிர வலது சாரிகளைத் தூண்டி விடக்கூடியது. இன்றளவில் அது ஏலவே தூண்டப்பட்டுள்ளது என்ற அடிப்படையில், பாரிய பொருளாதார சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டு, மேலும் மேலும் சர்ச்சைகளுக்குள் உள்ள அரசுக்கு ஏதோ ஒரு வகையான உதவிக் கரம் கிடைக்க வாய்ப்புள்ளது.

தற்போதைய ஐக்கிய இராச்சிய அரசியலில், பிரதமராக இருக்கும் இந்திய வம்சாவழியில் வந்தவரான ரிசி சுனக்கின் கன்சர்வட்டிவ் கட்சியானது, ஐரோப்பிய யூனியனை விட்டு ஐக்கிய இராச்சியம் வெளியேறுவதற்கான விஞ்ஞாபனத்தை முன் வைத்தே ஆட்சியைப் பிடித்தது. அப்போது, ஐரோப்பியர்கள், குறிப்பாக போலந்து, ரோமானியா போன்ற நாட்டவர்கள் தொழில் வாய்ப்புகளை அபகரிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டினூடான பிரிவினை வாதம் தூ ண்டப்பட்டிருந்தது. அதற்கு, இங்கிலாந்தின் வட பகுதியின் தொழிலாளர் வர்க்கம் வெகுவாகக் கவரப்பட்டிருந்தது. ஆயினும், ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறிய பின்னர், இன்று வரை பொருளாதாரத்தை நிலைப்படுத்த முடியாது அரசு தடுமாறுவதனால், மக்கள் மனம் வெகுவாக மாறி வருகிறது.

இவ்வாறான ஒரு பிரிச்சினைக்குரிய தேசிய சூழழில், இன்று பலஸ்தீன பிரச்சினையைப் புகுத்தியுள்ள ஆளுங்கட்சி, இது ஏதோ குறிப்பிட்ட மதத்தவர்களின் உணர்வு, அந்த உணர்வைத் தூண்டியதனுடாக ஜோர்ஜ் கலவே போன்றவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்ற செய்தியையும் உருவாக்க முனைகிறது. இதற்கு களம் தரும் வகையில், தனது வெற்றியுரையின் போது, எதிர்க்கட்சித் தலைவரின் பெயரைக் குறிப்பிட்டு, “இந்த வெற்றி காஸாவுக்கானது“ என கலவே தெரிவித்திருந்தார். ஆயினும், இதை விட, அன்றாட வாழ்க்கைச் செலவும் வருமானமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் போன்ற வறுமை நிலையில்லாவிடினும் கூட, கொரோனா பெருந்தொற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த செழிப்பில்லா வறுமை நிலைக்குள் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதால், தேசிய அளவில் இப்பிரச்சினையின் தாக்கம் சிறிதளவாகவே இருக்கும் என நம்பலாம்.

எனினும், இச்செய்தி மறக்கப்பட மாட்டாது. ஏனெனில், முஸ்லிம்களின் உணர்வு எப்போதுமே ஒரு ஆபத்துக்குரிய விடயமாகவே சித்தரிக்கப்பட்டு வருகிறது. இலங்கையிலும், 2012 முதல் இவ்வாறு உருவாக்கப்பட்டு வந்த சூழ்நிலை அழுத்தம், இலங்கையின் 2 மில்லியன் முஸ்லிம்கள் முற்றாகவே நிராகரித்திருந்தாலும், விலகி நின்றாலும் அது ஈஸ்டர் தாக்குதல் என்ற வரலாற்றுக் கரும் புள்ளியை உருவாக்கியுள்ளது.

பற்பல விசாரணைகளை நடாத்தி, அரசல் புரசலாக அரசியல்வாதிகளின் சதித்திட்டமே தாக்குதலுக்குக் காணம் என என்னதான் சொன்னாலும், ஈற்றில் மக்கள் மனதில் சஹ்ரான் என்ற பெயரும் அத்துடன் உள்ள இஸ்லாமோபோபியாவும் நீங்கப் போவதில்லை. இத்தகைய சர்வதேச சதி வலையில் முஸ்லிம் சமூகம் வீழ்ந்துள்ளமை யாவரும் அறிந்த விடயமாக இருந்தாலும், அதிலிருந்து நீங்குதல் நாளுக்கு நாள் சவாலாகவே இருந்து கொண்டு வருகிறது. ஒரு புறத்தில் என்னதான் பள்ளிவாசல்களைத் திறந்து மார்க்க வழி பாட்டில் வேறெதுவும் இல்லையென நிரூபிக்க முனைந்தாலும், இன்னொரு புறத்தில் ஏதோ ஒன்று தொடர்ச்சியாக எதிர்வினையாற்றிக் கொண்டேயிருக்கிறது.

அதனை எவ்வாறு எதிர் கொள்வது என்பது எப்போதும் சவாலான விடயமாகும். ஏனெனில், பரபரப்புக்கு எதிர் வினையாற்றி விட்டு, சமூகம் உறங்கச் சென்று விடுகிறது. ஆரம்பத்தில் காஸ ா தாக்குதல் பற்றி அல்லும் பகலும் செய்தி காவிக் கொண்டிருந்த எல்லா வித்தகர்களும் இப்போது ஓய்ந்துள்ளது போன்று. எனினும், இதுவும் தற்காலிக ஓய்வே! மீண்டும் ரமழானில் பலஸ்தீன விவகாரம் சூடு பிடிக்கும். அது எதனால்? என்ற கேள்வியே அவரவர் விடையறிய வேண்டிய கட்டாய வினா.

# உலகில் முதலாவதாக மெய்நிகர் சுற்றுலா முறையை அறிமுகம் செய்த சவூதி








(காலித் ரிஸ்வான்)

சவூதி கலாச்சார அமைச்சு உலகின் முதல் தேசிய கலாச்சார மெட்டாவெர்ஸ் தளத்தினை கடந்த வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தியது, இது பயனர்களுக்கு மெய்நிகர் (ஏசைவரயட சுநயடவைல) வரலாற்று, உல்லாசப் பயணங்களில் பங்கேற்க உதவுகிறது. மெட்டாவெர்ஸ் இன் இந்த அற்புதமான கண்டுபிடிப்பானது ஜெனரேட்டிவ் மீடியா இன்டலிஜென்ஸ் (புஆஐ) எனும் செயற்கை நுண்ணறிவு அமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

புஆஐ உடன் இணைந்து ஹைப்பர்லெட்ஜர் ஃ பேப்ரிக் 2.5 பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி னசழீபுசழரி மற்றும் “ாலபவையட“ அநவயஎநசளந உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான தளம் மெய்நிகர் ஆய்வு மற்றும் அத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவூதி ஹெரிடேஜ் மெட்டாவர்ஸ் தளமானது எண்ணற்ற வசீகர அனுபவங்களை பயனர்களுக்கு வழங்குகிறது. சவூதி அரேபியாவின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் கலாச்சார காட்சிகள் வரலாற்றுச் சுற்றுப்பயணங்கள், இசை நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் சிறு இ-விளையாட்டுகள் முதல் பல்வேறு வகையான செயல்பாடுகளை தூர தேசங்களில் இருந்து நிஜத்தில் அனுபவிப்பதை போல அனுபவிப்பதற்கான சந்தர்பத்தை இந்த தளம் ஏற்படுத்தி தருகிறது.

மேலும் இத்தளமானது சவூதியின் புரட்சிகர தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு ஒரு சான்றாக உள்ளது. இது அன்மைய, சவூதியின் நிறுவன தின சிம்பொனி கச்சேரி போன்ற நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை வழங்குகியதும் குறிப்பிடத்தக்கது. இந்த டைனமிக் டிஜிட்டல் சூழலானது மொபைல் போன்கள், ஏசு ஹெட்செட்கள் மற்றும் டெஸ்க்டாப்புகள் உட்பட பல சாதனங்களின் மூலம் அணுகக்கூடியதாக உள்ளது.

சவூதி கலாசாரத்தை சர்வதேச மக்களும் ரசிக்க, அனுபவிக்க வேண்டும் என அந்நாட்டு கலாச்சார அமைச்சகம் விரும்புகிறது. எனவே அவர்கள் உலகில் எங்கிருந்தாலும் கலாச்சார நிகழ்வுகளை அணுகச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்கிறது. இந்தப் புதிய முன்முயற்சி, மக்கள் கலாச்சாரத்தை குறிப்பாக ஒன்லைனில் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதை பிரதிபலிக்கிறது. மெய்நிகர் அனுபவங்களில் பங்கேற்பதன் மூலம், மக்கள் கலாச்சாரங்களை தம்மிடையே பகிர்வதற்கான புதிய வழியை உருவாக்கித் தருகிறது. இது தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியம் இரண்டினையும் இணைக்கும் பாலமாக காணப்படுகிறது.






# நானா நீயா அவனா?



சபீர் மொஹமட்

# மீண்டும் தப்பியோடிய துட்டகைமுனு!

சிங்கள மன்னன் துட்டகைமுனு ருகுனு ராஜதானியிலிருந்து அனுராதபுரத்திற்கு படையெடுத்து அங்கே ஆட்சி செய்து கொண்டிருந்த தமிழ் மன்னன் எள்ளாளனை போரில் வீழ்த்தி அனுராதபுர ராஜதானியை கைப்பற்றியமையும் அதன் பின்னர் பௌத்த மதத்திற்கு மன்னன் துட்டகைமுனு ஆற்றிய அளப்பரிய சேவைகள் பற்றியும் மகாவம்சம் கூறுகின்ற வரலாறு நம் அனைவருக்கும் தெரியும்.

ஆனால் மகாவம்சத்தில் இல்லாத ஒரு சம்பவத்தை தான் நான் இப்போது கூறப்போகின்றேன். ஒரு வகையில் அதுவும் துட்டகைமுனுவின் வரலாறுதான். அதன் ஒரு பகுதி நான்கு வருடங்களுக்கு முன்பு முடிவடைந்து. அதன் மறு பகுதி இப்போது கனடாவில் நடந்து கொண்டிருக்கின்றது.

எல்லாளனை வீழ்த்திய மன்னன் துட்டகைமுனு 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அனுராதபுர மாவட்டத்தில் போட்டியிட்டு 133,550 வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்ற கதை உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும் ?

இன்றைய பத்தியின் கதாநாயகன் உத்திக பிரேமரத்ன. பிரபல சிங்கள திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடக நடிகர். சிங்கள திரைப்பட இயக்குனர் ஜயந்த சந்திரசிரி 2015ஆம் ஆண்டு இயக்கி வெளிவந்த “மஹரஜ கமுனு” மாமன்னன் துட்டகைமுனு, என்ற சிங்கள திரைப்படம் பட்டி தொட்டி எல்லாம் மிகவும் பிரபல்யமாக அன்று பேசப்பட்டது. விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் இந்த திரைப்படம் பெரும் வெற்றியை பெற்றது. அதேபோல் இந்த திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்த உத்திக பிரேமரத்னவிற்கும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்தது. உத்திகவிக்கு கிடைத்த அந்த அமோக மக்கள் வரவேற்பை தேசியவாத கொள்கையுடைய விமல் வீரவன்ச ஒரு அரசியல் வரப்பிரசாதமாக வழங்குகின்றார். பின் உத்திக தனக்கு கிடைத்த மக்கள் வரவேற்பை சாதகமாக பயன்படுத்தி 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற பொது தேர்தலில் அனுராதபுர மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியும் பெறுகின்றார். உத்திகவின் தேர்தல் பிரச்சாரங்களில் போது “மஹரஜ கமுனு” திரைப்படத்தில் உத்திக துட்டகைமுனுவாக நடித்திருந்தமை குறிப்பாக “வீரம்” என்ற விடயம் பயன்படுத்தப்பட்டது.

பின்னர் பாராளுமன்றம் நுழைந்த நவீன துட்டகைமுனு உத்திக பிரேமரத்ன என்ன வீரச்செயல் செய்தார்? “மந்திரி எல் கே” இணையதளத்தின் ஆய்வுகளின் பிரகாரம் வெறும் 42 நாட்கள் தான் உத்திக பாராளுமன்றம் வந்துள்ளார். மேலும் 09 தலைப்புகளில் மாத்திரமே உத்திக பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் தரப்படுத்தலில் 225 பேரில் உத்திக 195 ஆவதாகவே உள்ளார்.

2021 ஆம் ஆண்டு அனுராதபுர மாவட்ட விவசாயிகள் உரம் இன்றி போராடும் போது நவீன துட்டகைமுனு எங்கே இருந்தான் ? அதே அனுராதபுர மக்கள் நீர் பஞ்சத்தினால் வாடும் போது எல்லாளனை போரில் வீழ்த்தி நாட்டை ஒருமைப்படுத்திய துட்டகைமுனு எங்கே? அதே அனுராதபுர மக்கள் நுண்கடன் நெருக்கடியால் தற்கொலை செய்து கொள்ளும் போது மாமன்னன் துட்டகைமுனு பாராளுமன்றத்தில் என்ன செய்தார்?

இந்திய ஆக்கிரமிப்பு இலங்கையில் நிகழ்ந்த காலத்தில், மஹாநாம தேரலால் எழுதப்பட்ட மகாவம்சத்தின் 37 அத்தியாயங்களில் 11அத்தியாயங்கள் மன்னன் துட்டகைமுனு பற்றியே பேசியுள்ளது. மகாவம்சம் ஆறாம் நூற்றாண்டில் எழுதப்படும் போது மன்னன் துட்டகைமுழுவின் கதை பல நூறு வருடங்கள் கடந்த வரலாறாக இருந்துள்ளது. ஆனால் “வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை மீட்டெடுத்தல்” என்ற தேவை மகாவம்சம் தொகுக்கப்படும் காலத்தில் காணப்பட்டது. அதற்காக மக்களை தயார்படுத்த வேண்டியும் இருந்தது. அதனாலேயே மன்னன் துட்டகைமுனுவுக்கு மகா வம்சத்தில் இத்தனை அத்தியாயங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். அன்று போல் மீண்டும் ஒருமுறை மகாவம்சம் கூறிய துட்டகைமுணுவாக நடித்த உத்திக, விமல் வீரவன்சவின் தேசியவாத அரசியலில் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றார். கோட்டாபய ராஜபக்சவின் கொள்கைகளுக்கு இணங்கி அரசியல் செய்த உத்திகவின் இன்றைய நிலை தான் மிகவும் பரிதாபமாக உள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் உத்திக பிரேமரத்னவின் வாகனத்திற்கு இனம் தெரியாத நபர்களால் சுடப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. யார் சுட்டார்கள்? என்ன காரணம்? என்ற எந்த ஒரு விசாரணை முடிவுகளும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அது அவ்வாறு இருக்க கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி உத்திக பிரேமரத்ன துபாய் சென்று பின்னர் அங்கிருந்து கனடா சென்றுள்ளார். கனடா சென்ற உத்திக, தனது உயிருக்கு இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதால் தனக்கு கனடாவில் புகலிடம் வேண்டும் என அங்கே அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளார்.

விமல் வீரவன்ச கோட்டாபய ராஜபக்ஷ போன்ற தேசியவாத கொள்கையுடைய அரசியல்வாதிகள் காரணமாக எத்தனை தமிழ் மக்கள் கடந்த பல தசாப்தங்களாக கனடா உட்பட ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவிலும் இன்று அகதிகளாக உள்ளார்கள். மகாவம்சம் கூறுவது போல் ‘ரு/ஹனு ராஜதானியிலிருந்து கொத்மலைக்கு தப்பி ஓடி நேரம் வரும்வரை காத்திருந்து பின்னர் படை திரட்டி அனுராதபுரம் சென்று வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைக் காப்பாற்றி நாட்டை ஒருமைப்படுத்திய’ மன்னன் துட்டகைமுனுவாக நடித்த நவீன துட்டகைமுனு பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன, பதவியில் இருக்கும் போதே கனடாவுக்கு தப்பிச் சென்றுள்ளமை சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய நகைப்புக்குரிய விடயமாக இந்த வாரம் உள்ளது.

நடிகர்கள் அரசியல் செய்யக்கூடாது என இங்கே கூறவில்லை. கடந்த 2022ஆம் ஆண்டு நாட்டிலே ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் போது கூட பல நடிகர்கள், கலைஞர்கள் நேரடியாக வீதியில் இறங்கி மக்களோடு நின்று கொண்டார்கள். அன்று மக்கள் உண்ண உணவின்றி வீதிக்கு இறங்கும்போது உத்திக பிரேமரத்ன எங்கே இருந்தார்? உத்திகவோடு சேர்ந்து நடிக்கின்ற ஏனைய கலைஞர்கள் மக்களுக்காக குரல் கொடுக்கும் போது மக்கள் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் வந்திருந்த உத்திக எங்கே இருந்தார்?

கடந்த ஆண்டின் சிறந்த நடிகருக்கான ரைகம் உட்பட சர்வதேச பல விருதுகளைப் பெற்ற ஜகத் மனுவர்ண என்ற சிங்கள கலைஞன் இன்று அரசியலில் உள்ளார். விஜய குமாரதுன்க, காமினீ பொன்சேகா இருவரும் அரசியல் செய்துள்ளார்கள். விஜய குமாரதுங்க, அன்று எல்லாவிதமான எதிர்ப்புகளையும் மீறி இனவாதத்திற்கு எதிராக வடக்கிற்கு பயணம் செய்து தெற்கில் வரலாற்று சிறப்புமிக்க அரசியல் கூட்டணிகளை கட்டியெழுப்பிய ஒரு அரசியல்வாதி. ரஞ்சன் ராமநாயக்க சிறந்த புத்தகங்களைப் படித்த ஒரு படித்த நிபுணத்துவம் வாய்ந்த அரசியல்வாதியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் உண்மையான நேர்மையாக ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கக்கூடிய ஒரு அரசியல்வாதி !

அத்தகைய பின்னணியில் உத்திக பிரேமரத்னவும் ஒரு நடிகர். அவர் துட்டகைமுனுவாக நடித்தார். அரசியலிலும் அதைத்தான் செய்தார். ஆனால் அதனை சரியாக செய்யவில்லை. தோற்றுவிட்டார் !!

# திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் கௌரவிப்பு நிகழ்வு



திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் குற்றமுத்தை கற்பித்த ஆசிரியர் நஜூமான் நலவங்ச மற்றும் அந்நிலையத்தின் நிறுவனறும் முன்னாள் பணிப்பாளருமான மர்ஹூம் ஜிப்ரி ஹனீபாவின் குடும்பத்தையும் பாராட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அந்நிலையத்தின் பார்வை குறைபாடுள்ள பழைய மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்டு நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் ஆசிரியர் நஜூ மான் நலவங்ச, அந்நிலையத்தின் நிறுவனறும் முன்னாள் பணிப்பாளருமான மர்ஹூம் ஜிப்ரி ஹனீபாவின் பாரியார் சித்தி ராபியா ஜிப்ரி ஹனீபா, மர்ஹூம் ஜிப்ரி ஹனீபாவின் புதல்வியான நஸீஹா ஹூஸ்னி உட்பட அந்நிலையத்தின் சார்பில் நிலைய முகாமையாளர் எஸ்.ஐ.எம். ஹலீல், நிலைய அதிபர் ரிபாயா இம்ஸான் ஆகியோரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கம்பஹா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செயான் தவுபீக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
- Counseling & Psychology
- Teacher Training
- Business Management
- Spoken English
- AMI Montessori
- Child Psychology
- IT Programs
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
Awarded By: INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
- HND (UK) in Business Management
- HND (UK) in Computing
- HND (UK) in Teacher Training
- HND (UK) in Psychology
- HND (UK) in English
CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032
AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

# தென்கிழக்குப் பல்கலையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட செயலமர்வு!






(நூருல் /ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினால் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வு நேற்று 2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை பீடத்தின் கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலின் கீழ் பீடாதிபதி அஷ்ஷெய்ஹ். எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.



மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இப் புலமைசார் செயலமர்வில் பெண்களின் திருமண வயதெல்லை, வலியின் தேவைப்பாடு, வலியின் ஒப்புதல், திருணமத்திற்கான பெண்ணின் சம்மதம், காழிகளின் தகைமை, பெண்காழிகளின் நியமனம், திருமணப் பதிவு, தாபரிப்பு மற்றும் பலதார மணம் போன்ற முக்கிய விடயப் பரப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும், பீடாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட "இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு குறித்த முஸ்லிம் சமூகத்தின் கருத்துநிலை" எனும் ஆய்வின் முடிவுகளும் இவ்வமர்வில் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.எம் மஸ ாஹிர், பேராசிரியர் கலாநிதி ஆர்.ஏ. சர்ஜுன், கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ், கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி மற்றும் உஸ்தாத் மன்ஸுர், கலாநிதி. ஷாமிலா தாவூத், கலாநிதி ஷிஹான் தாவூத், டாக்டர் வை.எல்.எம்.யூஸுப், எம்.எம்.எம். சாபிர், கலாநிதி எம்.பீ. பௌஸுல், கலாநிதி யூ.எல்.அஸ்லம் ஆகியோருடன் சட்ட அறிஞர்களான கலாநிதி ஏ.எல்.கபூர், எம். எச்.எம். றுஸ்தி, எம்.ஏ.சீ.எம். உவைஸ், ஏ.சீ.எப். ஹுஸ்னா, அஷ்ஷெய் டீ.எம். எம். அன்ஸார், ஜெ. றாஷி முஹம்மத் போன்றோர் இதில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற முஸ்லிம் அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், முஸ்லிம் சமூகத்தலைவர்கள், பெண் ஆர்வாலர்கள், துறைசார் நிபுணர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்ததுடன், இதில் பார்வையாளர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன.

இக்குறித்த நிகழ்வில் வளவாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஆவணமாக்கப்பட்டு வெளியிடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என பீடாதிபதி குறிப்பிட்டார். இவ்விடயப்பரப்புகள் தொடர்பாக மற்றுமொரு அமர்வினை ஒழுங்குசெய்யுமாறு இவ்வமர்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மிஷ்காதுல் மஸாபி தமிழ் மொழி பெயர்ப்பு தொகுதி அறிமுகமும் நூல் வெளியீட்டு விழாவும்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் ஸிஹாஹ் ஸித்தா தீஸ் கிரந்தங்களின் மிஷ்காதுல் மஸாபி தமிழ் மொழி பெயர்ப்பு தொகுதி அறிமுகமும் நூல் வெளியீட்டு விழாவும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் தமிழ் பிரிவுடன் இணைந்து தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் கடந்த வெள்ளிக்கிழமை (01) திகதி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் ரிஷ்வி மரிக்கார் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக பேருவளை ஜாமிய நளீமியா இஸ்லாமிய நிறுவனத்தின் முதல்வர் அஷ் ஷெய்ஹ் ஏ.சி. அஹார் முஹம்மது, பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது விசேட உரையை பிரதம அதிதிகள் வழங்கினார், சிறப்புரைகளை சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே.எம்.இல்யாஸ் ரியாஜி, புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூத் பள்ளியின் தலைமை இமாம் ஹாபிழ் ஏ.பீர்முகம்மது பாகவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான எம்.தமீமுன் அன்சாரி, அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவின் முன்னாள் விரிவுரையாளரும் மலேசியாவின் சயின்ஸ் இஸ்லாம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ஏ.ஏ.அஸ்வர் (அஸ்ஹரி) ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

இதன்போது பாடசாலையின் தமிழ் பிரிவு வளர்ச்சிக்காக ரஹ்மத் பதிப்பகத்தினால் இரண்டு இலட்சம் ரூபா காசோலையும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் நூலின் ஒரு தொகுதியையும் கல்லூரிக்கு அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் நூலின் பிரதிகளை வருகை தந்த முக்கிய பிரமுகர்களுக்கும் வழங்கப்பட்டதுடன் அதிதிகள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

## தவிசாளராக நியமனம்



அட்டாளைச்சேனையை சேர்ந்த இப்ராகீம் அமீர் மௌலவி அவர்கள் புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஊாயசைஅயவெ, தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டவரும் ஐக்கிய முஸ்லிம் கட்சியின் ஸ்தாபக செயலளருமாவார்.


அரசியலில் நீண்ட கால அனுபவம் கொண்ட இவரை புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளராக நியமிக்கப்பட்டிருப்பது பெரிதும் வரவேற்கப்படுகிறது.

## புத்தளத்தில் ஈரான் கலாச்சார கண்காட்சியும் திரைப்பட விழாவும்

ஈரான் கலாச்சார நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாக்கிழமை (மார்ச் 05) ஆம் திகதி காலை 10மணி முதல் புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

புத்தளம் கலாச்சார மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி நிகழ்வுக்கு ஈரான் கலாச்சார நிலையத்தின் கலாச்சார உயரலலுவளர் Dr.ப/ஹமான் மொஸாமி பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

புத்தளம் ஈரான் உறவுகளை மீண்டும் உயிர்பித்து, நமது மாணவர்களுக்கு UGC அனுமதி பெற்ற பட்டப்படிப்பை இலங்கையிலேயே இலவசமாகவும் புலமை பரிசில்களை பெற்றும் உயர்கல்வி கற்கும் சந்தர்ப்பங்களை நாடி முன்னெடுக்கப்படும் முயற்சியாகும்.

# கொழும்பை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கிராமத்திற்கு எடுத்துச் செல்வோம்

## கொழும்பு மகாநாட்டில் அனுரகுமார







நாங்கள் இரண்டு பிரதான சவால்களை எதிர்நோக்கி இருக்கின்றோம். முதலாவது அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது இரண்டாவது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின் நாட்டை கட்டி எழுப்புவது. இவ்விரண்டு சவால்களுக்கு மத்தியில் அதிகாரத்தை பெற்றுக் கொள்கின்ற பாதையில் தான் நாட்டை கட்டி எழுப்புகின்ற பாதையும் உள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க வங்கி மற்றும் நிதி சார் ஒன்றியத்தின் கொழும்பு மாவட்ட மகாநாட்டில் அண்மையில் (25) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த காலங்களில் எமது நாட்டில் அரச அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக பல வழிகள் தெரிவு செய்யப்பட்டது. 2005 ஆம் ஆண்டு வடக்கின் தமிழ் மக்களுக்கு எதிராகவும், 2010 ஆம் ஆண்டு யுத்த வெற்றியின் மூலமும், 2019 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராகவும் கட்டியெழுப்பப்பட்டது. அது சிறந்த வழி அல்ல. மாறாக மக்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்துகின்ற பாதையில் இந்நாட்டை மாற்றியமைத்திட வேண்டும். அதுவே சிறந்த வழியாகும்.

நாம் மக்களை ஒற்றுமைப்படுத்துகின்ற போது சவால்களை எதிர்கொள்கின்ற இரண்டு இடங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று கிராமிய ரீதியில் அடிமட்டத்தில் வசிக்கின்ற மக்கள் மற்றயது எம்முடன் இணையாத குழுவினர் மத்தியில் எமது அபிப்பிராயங்களை எவ்வாறு கொண்டு செல்வது என்பது தொடர்பில் கவனம் செலுத்துவது போன்றனவாகும்.

அரச பொருளாதாரம்,சட்ட ஆட்சி, வினைத்திறனற்ற அரச ஆளுகை மற்றும் குற்ற செயல்கள் அதிகரித்துள்ளமை போன்ற செயற்பாடுகளால் நாடு சீரழிந்து காணப்படுகிறது. இதனை நாம் அதிகமாக உணர்கின்றோம். இவ்வாறான அனைத்து துறைகளிலும் மாற்றங்களை மேற்கொள்வது அவசியமாகின்றது.

133 வருடங்களாக வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருந்த நாம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த வேளையில் தேசத்தை கட்டி எழுப்புவதற்கான மாபெரும் புத்துணர்ச்சியை கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் சுதந்திரம் அடைகையில் எமது நாட்டைக் கொண்டு செல்ல வேண்டிய திசை பற்றியும், பொருளாதார நோக்கு, திட்டம், குறிக்கோள் என்பன பற்றிய அறிவு எமக்கு இருக்கவில்லை. எமது கொள்கை பிறரை மோத விட்டு வேடிக்கை பார்ப்பதாகும். எமது அயல் நாடான இந்தியா மக்களை ஒன்று சேர்த்து வரலாற்றை கட்டியெழுப்புகையில், இங்கு எம்மவர்கள் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சில அரசியல் தலைமைகள் உலகில் இடம்பெறுகின்ற புதிய மாற்றங்கள் பற்றிய சிந்திப்பதில்லை. வரலாற்றில் இடம்பெற்ற சில நிகழ்வுகளை திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டு எம்மை அதற்குள் சிறைப்படுத்தி அதன் மீது அவர்கள் அரசியல் செய்ய முனைகின்றார்கள்.

முற்காலத்தில் நிலவியே தொழில்நுட்பம், கட்டிடக்கலை, சமூக அமைப்பு பற்றி நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். அவற்றை ஆதாரமாகக் கொண்டு எதிர்கால பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இந்தியா கலாச்சாரத்தை பலப்படுத்தி பாரிய பொருளாதாரத்தை நிர்மாணித்து பல துறைகளில் முன்னிலையில் நிற்கின்றது. இதன் காரணமாக அது பலம் பொருந்திய நாடாக மாறி உள்ளது.

மனித தேவைகள் என்பது ஐம்புலன்களை திருப்திப்படுத்துவதாகும். இந்த தேவைகளை நிறைவு செய்கின்ற பணியினை சந்தைகள் உருவாக்குகின்றது. உதாரணமாக அழகு கலையை எடுத்துக் கொள்வோம். முற்காலத்தில் உடல் அழகைப் பேண மஞ்சள், வெள்ளை சந்தனம், சிவப்பு சந்தனம் என்பன சந்தையில் காணப்பட்டது. ஆனால் தற்பொழுது அழகு கலைகளுக்கென சந்தையில் பல உற்பத்திப் பொருட்கள் அறிமுகம் செய்து உற்பத்தியாளர்கள் வெற்றி கண்டுள்ளார்கள். அழகுக்கலை உற்பத்தித் தொழிலில் உயர்வான இடத்தையும், ஸ்மார்ட் போன் உற்பத்தியில் உயர்வான இடத்தையும் தென்கொரியா பெற்றுள்ளது.

நாங்கள் ஏன் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக மக்களை அழைக்கின்றோம்? தற்பொழுது பயணத்துக் கொண்டிருக்கின்ற திசைக்கு பதிலாக புதிய திசை நோக்கி எமது நாட்டை வளப்படுத்த வேண்டும். அதுவே நவீன உலகத்துடனான எமது உறவுகளை கட்டி எழுப்பும். இது ஒரு தேசிய இயக்கமாகும். நாட்டை கட்டி எழுப்ப தேசிய புத்துணர்ச்சி அவசியம். எதிர்வரும் தேர்தலில் 76 வருடங்களாக ஆட்சி செய்த ஆட்சியாளர்களை விரட்டி அடிப்பதே மக்கள் மத்தியில் உள்ள பாரிய எதிர்பார்ப்பு என நாங்கள் நம்புகின்றோம்.

வெளிநாடுகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், ஆதன உரிமையாளர்கள், கல்வியலாளர்கள், அனுபவம் வாய்ந்த இலங்கையர்கள் எமது நாட்டிற்கு திரும்ப வருவதற்கு தயாராக இருக்கின்றார்கள். அவர்களே நாட்டை கட்டி எழுப்புவதற்கான அத்திவாரமாகும். பொருளாதார பக்கத்தை மாத்திரம் இன்றி பொறுப்பு வாய்ந்த பிரஜைகளைக் கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும். அரசியல்வாதிகள் பொறுப்பு கூறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். எமக்கு ஒரு புதிய நாகரீகம் அவசியம். அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்றவற்றில் புதிய மாற்றத்தை உருவாக்க நாங்கள் முன்மொழிகின்றோம். அதுவே ஒட்டுமொத்த முறைமையினதும் மாற்றமாகும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் பொது திரைசேரியில் ரூபா இல்லாமையும் நாட்டில் டொலர் இல்லாமயும் ஆகும். இப் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட பொருளாதார திட்டம் எவ்வாறு வகுக்கப்பட வேண்டும். திரைசேரியின் வருமானத்தை எவ்வாறு அதிகரித்துக் கொள்ள முடியும் என்ற குறிக்கோள் எம்மிடம் நிலவுகின்றது. எமது நாட்டில் வரி விதிப்பு அதிகரித்து உள்ளமையால் பொருளாதாரம் சிறை படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொருளாதாரம் விரிவடைவதில்லை. எமக்கு தளர்வான ஒரு வரி கொள்கை அவசியம். எமது திட்டம் பொருளாதாரத்தை விரிவாக்குவதாகும். எம்மிடம் இருப்பது கொழும்பினை மையப்படுத்திய பொருளாதாரம் ஆகும். நாங்கள் அதனை கிராமிய மக்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் புதிய பொருளாதார தோற்றுவாய்களை கிராமத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

பிரஜைகளை பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுத்தி பொருளாதாரத்தை மேலோங்கச் செய்ய வேண்டும். அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வரிக் கொள்கையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். விலங்கிடப்பட்டுள்ள பொருளாதாரத்தை சுதந்திரமாக அசைவிற்கு கொண்டு வர வேண்டும். இதன் மூலமாக சிறந்த பொருளாதாரத்தையும் சிறந்த நாட்டை கட்டி எழுப்ப முடியும் என தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரா குமார திசாநாயக்க கொழும்பு மகாநாட்டில் தெரிவித்தார்.

# கேகாலை வை.எம்.எம்.ஏ கிளையின் ஏற்பாட்டில் மாவனல்லையில் இரு நிகழ்வுகள்





(பாராத் தாஹிர்)

கேகாலை மாவட்ட வை. எம். எம். ஏ கிளை ஏற்பாடு செய்த ஓய்வு பெற்ற அதிபர்களை பாராட்டி கௌரவிக்க நிகழ்வும், மீலாத் பரிசளிப்பு விழாவும் மாவனல்லை நாகூர்கம திவ்மினி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கேகாலை மாவட்ட பணிப்பாளர் எம். கே. ஏ. லுக்மான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற மிலாத் பரிளிப்பு விழாவில் சுமார் 30 மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் சின்னம் அறிவிககப்பட்டதோடு ஓய்வு பெற்ற சுமார் 80 அதிபர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசிய நாட்டுத் தூதுவர் பாதில் ஷாம் ஆதம், விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிடிய மற்றும் வை.எம். எம்.ஏ.யின் தேசிய தலைவர் இஸான் ஏ ஹமீட் உட்பட பல சிறப்பு அதிதிகள், உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற செயலாளர் நாயகம் தென்கிழக்கு பல்கலைக்கு விஜயம்





(ஏ எல் எம் ஷினாஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உள்வாரி இளங்கலை பட்டதாரி மாணவர்களுக்கான பாராளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் பற்றிய குறுங்கால கற்கை நெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைக்கும் நிகழ்வு அண்மையில் (27) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கலை கலாச்சார பீட அரசியல் துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் குஷானி அனுஷா ரோஹனதீர கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், கலை கலாச்சார பீடத்தின் பிடாதிபதி பேராசிரியர் எம்.எம் பாசில் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் கற்கை நிறைய பூர்த்தி செய்த 246 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் பேராசிரியர்கள் பதில் பதிவாளர், திணைக்களங்களின் தலைவர்கள் சிரேஷ்ட கணிஷ்ட விரிவுரையாளர்கள் சிரேஷ்ட நிதியாளர், பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கண்டி தெல்தோட்டை எனசல்கொல்ல பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு

கண்டி தெல்தோட்டை எனசல்கொல்ல ஆரம்ப பிரிவு பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் அதிபர் சி.எம். எப். சிமாரா தலைமையில் இன்று (03) இடம்பெற்றது.

2023 ஆம் ஆண்டு பல துறைகளில் சாதனை படைத்த மாணவர்கள்


இந்நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டவுடன் இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக கண்டி கல்வி வளைய பணிப்பாளர் டி. சி. ஐ. அந்தரகே கலந்து கொண்டதுடன் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைத்திட்டத்தினை எதிர்வரும் ஏப்ரலுக்குள் நிறைவு செய்யவும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் பணிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைத்திட்டத்தினை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக்குழுவைப் பணித்துள்ளார்.



அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான விஷேட கூட்டம் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) கண்டியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 226 கிராம சேவகர் பிரிவுகளில் கட்சிகிளைகளை புனரமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் இதுவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் நிறைவுபெற்ற கிராமங்களில் விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினால் மத்திய குழுக்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் விருது விழா

(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி மட்ஃமமஃஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் 2024 விருது விழா வியாழக்கிழமை (29) பாடசாலை பிரதான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.எம்.முஜீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஷெய்த் அலிசாஹிர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன்

காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம்.ஹக்கீம், முன்னாள் நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் ஆகியோர் விஷேட அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சாதனை புரிந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவராக அமீர் அஜ்வத் நியமனம்



தற்போது சவூதி அரேபியா விற்கான இலங்கைத் தூதுவராக செயற்படும் பீ.எம். அம்சாவின் பதவிக் காலம் விரைவில் நிறைவடைய வுள்ளது. இதனையடுத்து, குறித்த பதவியினை வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராக தற்போது செயற்படும் அமீர் அஜ்வத் பொறுப்பேற்கவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் சிபாரிசுடனான இந்த நியமனம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நியமனத் திற்கு பாராளு மன்றத்தின் உயர் பதவிகளுக்கான குழுவினால் கடந்த வெள்ளிக்கிழமை (01) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அமீர் அஜ்வத் இதற்கு முன்னர் ஓமானிற்கான இலங்கைத் தூதுவராகவும், சிங்கபூரிற்கான இலங்கையின் பதில் உயர் ஸ்தானகராகவும் இவர் கடமையாற்றி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை ஓமானில் மேற்கொண்ட பணியினை அடிப்படையாக வைத்து இலங்கை , ஓமான் உறவுகள் தொடர்பான நூலொன்றினையும் இவர் எழுதியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு சேவையில் 1998ஆம் ஆண்டு இணைந்த இவரது முதலாவது வெளிநாட்டு பதவியினை றியாதிலுள்ள இலங்கை தூதுவராலயத்தில் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேதிகமாக சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர் ஸ்தானிகராலயம் மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான தூதுவராலயம் போன்றவற்றிலும் இவர் கடமையாற்றியுள்ளார். அரபு மொழி பாண்டித்தியம் பெற்ற இவர் ஒரு சட்டத்தரணியுமாவார்.

## முஸ்லிம் மகளிர் சங்கத்தின் பரிசளிப்பும் கருத்தரங்கும்






(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் மகளிர் தொழில் வல்லமை மற்றும் வணிகவியலாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு அண்மையில் தெஹிவளை சம் சம் பவுண்டேஷன் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் குடும்பப் பெண்கள் மற்றும் ஐக்கியம் என்ற தலைப்பில் பிரபல பேச்சாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ரைஸ் முஸ்தபா மற்றும் ஜமியத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்சேக் அர்க்கம் நூரி ஆகியோர் விரிவுரை நிகழ்த் தியதோடு, ஆங்கில மொழி கட்டுரை போட்டியில் வெற்றி யீட்டிய மாணவர் களுக்கு பரிசுகளும் சான்றிதழ் களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அமைப்பின் முன்னால் தலைவி ஷானாஸ் ரவூப் ஹக்கீம், முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் பழீலா ஜுரம்பதி, அமைப்பின் தலைவி கரிமா சித்தி ஆகியோர் பங்கு பற்றியதுடன் பாடசாலை மாணவிகளும் பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முதளைப்பாளி, 90 ஏக்கர், அல் - ஹஸனாத் பாலர் பாடசாலையின் விடுகைவிழா!





புத்தளம், முதளைப்பாளி, 90 ஏக்கர், அல் – ஹஸனாத் பாலர் பாடசாலையின் விடுகைவிழா, கடந்த வெள்ளிக்கிழமை (23) 90 ஏக்கர், அல் ஹஸ்பான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி வலய இணைப்பாளர் ஜெளசிரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

அத்துடன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.டி .எம்.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், றிபாஸ் நசீர் மற்றும் கட்சியின் முதளைப்பாளி அமைப்பாளர் தௌபீக், முபாரிஸ், இணைப்பாளர் மதீன், முன்பள்ளி ஆசிரியை ஜிப்ரியா, மௌலவி பஸால் சலபி, சாஹுல் ஹமீட், கவிக்குரல் மன்சூர் மற்றும் கவிஞர் முனவ்பர்கான் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சேவை நலன் பாராட்டு விழாவும்

ஸ்ரீபுத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து கல்முனை கலாசார மத்திய நிலையம் ஏற்பாடு செய்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், சேவை நலன் பாராட்டி கௌரவித்த நிகழ்வும் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஜீ.சித்தி பாஜியா தலைமையில் அண்மையில் (25) கல்முனை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

திறன் அபிவிருத்தி பாடத்திட்டதினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதோடு, ஒலிபெருக்கி சேவையினை 37 வருடங்களாக செய்தமைக்காக எம்.எம்.நிஸார் (நியூ நிஸார்) மற்றும் சிகை அலங்கார சேவையினை 38 வருடங்களாக வழங்கியமைக்காக கணபதிபிள்ளை தாமோதரம் (சிகான் சலூன்) ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அகீலா பாணு மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் எம்.ஏ.எம். ஹைதர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி ,கௌரவ அதிதியாக சுற்றுச்சூழல் மனித வள அபிவிருத்தி அதிகாரி எம்.பீ.ஸியாரதுல் பெரோஸ், விசேட அதிதியாக ஆபிதா ஹேன்லூம் உரிமையாளர் எம்.என்.சற்.றூமியும் கலந்து கொண்டதுடன் விசேட அழைப்பின் பேரில் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலி, சிறுவம் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் ஓ.கே.எப்.சரீபா,கவிஞர்கள்,கவிதாயினிகள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





## சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளராக சர்தார் மிர்ஸா நியமனம்



சம்மாந்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த எஸ்.எல் சர்தார் மிர்ஸா அவர்கள் கடந்த 27ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டி.எம். எம்.அன்சார்,இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் ரஸ்ஸான்(நளீமி),சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ராஸீட் யஹியா, சம்மாந்துறை பிரதேச செயலக முன்னாள் கணக்காளர் ஐ.எம் பாரீஸ்,அக்கரைப்பற்று பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்.ஏ.எம் தமீம்,அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய கணக்காளர் ஏ.கே அஸ்கர், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல் ஆகீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவர் அக்கரைப்பற்று, தமன,காரைதீவு, அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகங்களில் கணக்காளராகவும் கடமையாற்றியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை, இந்திய உறவுகள்...
# இப்போதைய தேவை என்ன..!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இலங்கையின் அண்டை நாடு இந்தியா. இரு நாடுகளின் உறவு 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய பாரம்பரிய கலாச்சார பின்னணியை கொண்டது.

மேலும் இரு தரப்பினரும் அறிவுசார், கலாச்சார, மத மற்றும் மொழியியல் பரிமாற்றத்தின் பாரம்பரியத்தை கட்டமைத்துள்ளனர். சமீபத்திய ஆண்டுகளில், இந்தியா இலங்கை உறவுகள் இறுக்கமான அரசியல் உறவுகள், அதிகரித்த வர்த்தகம் மற்றும் முதலீடு மற்றும் அபிவிருத்தி, கல்வி, கலாச்சாரம், பாதுகாப்பு மற்றும் மிகவும் தீவிரமான உலகளாவிய பிரச்சினைகள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை இரண்டு நாடுகளும் கொண்டு இயங்குகிறது.

மார்ச் 2022 ம் ஆண்டு , இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளும் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் உரையாற்றினார் .

அதே நேரத்தில் மிகவும் இக்கட்டான தருணத்தில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு இந்தியா அளித்த உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தியாவின் “அண்டை நாடுகளுக்கு முதலில்” உத்தி மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (ஜுயுபுயுகு) கோட்பாட்டில் இலங்கையின் முக்கிய பங்கு குறித்து இந்தியப் பிரதமர் பேசினார் . இநதியாவை பொருத்தவரை இந்த பிராந்தியத்தில் இலங்கையின் நட்பு மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. அதேநேரத்தில் இலங்கையின் உறவை மேம்படுத்தவும் , இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து எல்லா நிலைகளிலும் ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறினார்.

### இந்திய-இலங்கை உறவுகளின் வரலாற்றுப் பின்னணி

இந்தியாவும் இலங்கையும் 2,500 ஆண்டுகளுக்கும் மேலான அறிவார்ந்த, கலாச்சார, மத மற்றும் மொழியியல் தொடர்புகளின் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன. இராமாயணத்தில் முதன்முறையாக இலங்கை குறிப்பிடப்பட்டது. இலங்கையில் சீதையை பணயக் கைதியாக வைத்திருந்த ராவணன், அனுமனின் உதவியால் ராமனால் விடுவிக்கப்பட்டார்.

### இந்தியா-இலங்கை சுதந்திரத்திற்கு முந்தைய உறவு

இலங்கை புராணத்தின் படி, மௌரியப் பேரரசர் அசோகரின் மகன் மகிந்த, கிமு மூன்றாம் நூற்றாண்டில் தீவுக்கு புத்த மதத்தை அறிமுகப்படுத்தினார் .

மௌரியப் பேரரசு இந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்து, அசோகரின் கீழ் பௌத்தத்தை வளர்க்கத் தொடங்கியது.

அப்போதிருந்து, இலங்கை தெற்காசியாவில் ஒரு பௌத்த கோட்டையாக உள்ளது பின்னர், இலங்கையிலிருந்து வந்த மிஷனரிகள் தென்கிழக்கு ஆசியாவில் தேரவாத பௌத்தத்தை அறிமுகப்படுத்தினர், அப்பகுதி இந்து அல்லது மகாயான பௌத்தமாக இருந்தபோதிலும் .

மிக சமீபத்திய வரலாற்றுக் காலங்களில், வட இந்தியாவில் இருந்து மக்கள் குடியேறி இலங்கையை நகரமயமாக்கியதாக அறியப்படுகிறது.

இலங்கையின் சிங்கள மக்கள், வரலாற்று ஆவணங்கள் மற்றும் புராணங்களின் படி, இந்திய இராச்சியத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இலங்கைக்கு ஒரு புதிய இராச்சியத்தை நிறுவிய இளவரசர் விஜயாவின் பின்பற்றுபவர்களிடமிருந்து வந்தவர்கள்.

சிங்களவர்கள் தங்கள் தமிழ் அண்டை நாடுகளைப் போல திராவிட மொழியைக் காட்டிலும் சமஸ்கிருதத்திலிருந்து உருவான இந்தோ-ஆரிய மொழியைப் பேசுகிறார்கள்.

இருப்பினும், சிங்களவர்கள் வங்காளத்திலிருந்து அல்லது கிழக்கு இந்தியாவின் ஒடிசாவிலிருந்து தோன்றினரா அல்லது மேற்கு இந்தியாவின் குஜராத்தில் இருந்து தோன்றினார்களா என்பது விவாதத்திற்குரியது.

இலங்கையின் வரலாறு, நாட்டுப்புறக் கதைகள் மற்றும் தொன்மங்கள் இந்திய இளவரசர்கள் அல்லது சாகசக்காரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி வம்சங்களை நிறுவிய கதைகளால் நிறைந்துள்ளன.

இந்த நிகழ்வான வரலாற்றில், தீவின் வடக்கே உள்ள அனுராதபுர இராச்சியம், 993 இல் ராஜ சோழனின் பாரிய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, அதை சோழப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது . இது இலங்கை மீதான சோழர்களின் ஆதிக்கத்தின் தொடக்கத்தைக் குறித்தது.

மேலும், ஏராளமான போர்கள் சேரர்கள், சாளுக்கியர்கள் மற்றும் இலங்கையின் சிங்கள இராச்சியம் போன்ற பிற சக்திகளை ஈர்த்தது .

நவீன வரலாற்றில், இலங்கையின் பூர்வீக மக்கள் முன்னாள் சிலோன்) ஆங்கிலேயர்களால் காலனித்துவப்படுத்தப்பட்டனர், இருப்பினும் அவர்கள் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக இல்லை , மேலும் அவர்கள் சுதந்திரமாக நிர்வகிக்கப்பட்டனர்.

### இந்தியா-இலங்கை உறவுகள்

சுதந்திரம் பெற்றதில் இருந்து, இந்தியாவும், இலங்கையும் பல்வேறு நிலைகளில் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்தியுள்ளன, மேலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் (IDPs) மற்றும் இலங்கை மக்கள்தொகையின் பின்தங்கிய குமுக்களுக்கான அபிவிருத்தி உதவித் திட்டங்களை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இரு நாடுகளையும் வலுப்படுத்த உதவியுள்ளன.

மே 2009 இல், இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக நீடித்த இராணுவ மோதல் முடிவுக்கு வந்தது.

மோதல்கள் முழுவதிலும், பயங்கரவாதக் கூறுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் உரிமையை இந்தியா ஆதரித்தது. இந்தியாவில் தற்போது ஆளும் பாஜக வும், முன்னர் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியும் ஸ்ரீலங்காவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த ஆதரவை நல்கி வந்தது மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. அதாவது விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் இந்தியா இலங்கை அரசுடன் முழுமையாக இணைந்து செயல்பட்டு வந்ததை நாம் இந்த தருணத்தில் சுட்டி காட்ட விரும்புகிறேன்.அதே சமயம், புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு பாதிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தி, பெரும்பாலான தமிழ் குடிமக்களின் அவலநிலை குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை உயர் மட்டத்தில் தெரிவித்தது.

உயர் மட்டங்களில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மூலம் தேசிய நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும், பிளவுபடாத இலங்கையின் கட்டமைப்பிற்குள் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் பேச்சுவார்த்தை மூலம் அடையக்கூடிய இராஜதந்திர அரசியல் தீர்வை இந்திய அரசாங்கம் தொடர்ந்து ஆதரித்து வருகிறது. இலங்கை பிளவுபட்ட நிலையில் இந்தியாவில் பிரிவினை சக்திகள் ஊக்கம் பெற்று விடக்கூடாது என்பதே இந்திய ஆட்சியாளர்களின் கவலையாக உள்ளது.

ஆயுத மோதலின் தீர்வைத் தொடர்ந்து, ஒரு குறிப்பிடத்தக்க மனிதாபிமான சவால் எழுந்தது, இதில் சுமார் 300,000 தமிழ் பொதுமக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்காக (ஐனீஸ்) நியமிக்கப்பட்ட முகாம்களில் வசிக்கின்றனர். இந்திய அரசாங்கம், இடம்பெயர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவாகத் திரும்புவதற்கு வசதியாக கணிசமான உதவித் திட்டத்தைச் செயல்படுத்தியது. இது சர்வதேச மதிப்பில் பல ஆயிரக்கணக்கான மில்லியன் அமெரிக்க டாலர்கள் தொகை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரத்தில் கூடுதலாக, இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் அசல் வாழ்விடங்களுக்கு உடனடியாக மீள்குடியேற்றுவதற்கான நிலையான வாதங்கள் இருந்தன. தற்போதைய நிலையில் அது தொடர்ந்து வருகிறது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசியல் உறவுகளை உயர்மட்டப் பரிமாற்றங்கள் வகைப்படுத்தியுள்ளன.

பெப்ரவரி 2015 இல், இலங்கையின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதல் முறையாக இந்தியாவுக்கு விஜயம் செய்தார், அதே ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடி கொழும்பு திரும்பினார். 28 ஆண்டுகளில் சொந்தமாக இலங்கை வந்த முதல் இந்தியப் பிரதமர் இவர்தான்.

கூடுதலாக, ஜுன் 9, 2019 அன்று, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கு ஒருமைப்பாட்டைத் தெரிவிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஒரு சுருக்கமான பயணமாக இலங்கைக்குச் சென்றார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2016 மே முதல் 2019 மே வரை ஐந்து விஜயங்களை மேற்கொண்டு பின்வரும் நிறைவு விழா அமர்வுகளில் கலந்து கொண்டார்.

செப்டம்பர் 26, 2020 அன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் இலங்கை பிரதமர் உ.நு மகிந்த ராஜபக்சே ஆகியோர் மெய்நிகர் இருதரப்பு உச்சிமாநாட்டை (ஏஊஸ்) நடத்தினர், இதில் இரு நாடுகளின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கை பாரம்பரியமாக இந்தியாவின் மூலோபாய நட்பு நாடாக இருந்து வருகிறது, ஆனால் சீனாவுடனான அதன் தொடர்பு சமீபத்திய ஆண்டுகளில் வளர்ந்துள்ளது.

இந்தியா இலங்கைக்கு மானியங்கள் மற்றும் பிற வகையான உதவிகளை வழங்குகிறது மற்றும் எப்போதும் ஒரு முக்கிய அபிவிருத்தி பங்காளியாக பார்க்கப்படுகிறது.

இருப்பினும், முன்னாள் அதிபர் ராஜபக்சே இலங்கையை சீனாவுடன் நெருக்கமாக்கினார் மற்றும் இந்திய கவலைகளை, குறிப்பாக நாட்டின் நீண்டகால உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களின் மறுவாழ்வு பற்றி புறக்கணித்தார்.

ஆனால் போருக்குப் பிறகு ராஜபக்ச 13யு இனை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்தியாவின் உதவி வழங்கப்பட்டது. ராஜபக்ச "13A +" என்று பெரும் வாக்குறுதி அளித்தார் ஆனால் பின்னர் நிராகரித்தார். எனவே, இலங்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டபோது, இலங்கைக்கு எரிச்சலூட்டும் வகையில் இந்தியா நடுநிலை வகித்தது. இலங்கையில் உள்ள அபிப்பிராயங்கள் கொழும்பை ஆதரித்த பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கு சாதகமாக ஆரம்பித்தன.

2010ல் ராஜபக்ச இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது, இலங்கைக்கு மிகஅவசியமாகத் தேவைப்படும் உட்கட்டமைப்புகளை உருவாக்க உதவுமாறு சீனாவை அழைத்தார். சீனா அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையத்தை நிர்மாணித்ததுடன், கொழும்பு துறைமுக நகரத்திற்கான நிலத்தை அமைத்ததுடன் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் முனையத்தை அமைத்தது. எவ்வாறாயினும், கொழும்பில் உள்ள கொள்கலன் முனையத்தைத் தவிர, விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் ஆகியவை வெள்ளை யானைகளாக நிரூபணமானதால் கடன் நெருக்கடிக்கு பங்களித்தன. அந்நிய செலாவணியின் கடுமையான பற்றாக்குறை இலங்கையர்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்கு தங்கியிருந்த இறக்குமதியில் பாரிய குறைப்புக்கு வழிவகுத்தது. இலங்கைக்கு மேலும் கடனையும், கொள்வனவாளர்களின் கடனையும் மட்டுமே வழங்கி, இலங்கையின் வீழ்ச்சியை சீனா பார்த்துக் கொண்டது. பெய்ஜிங் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் கோரியது. ஆனால் இந்தியா 4.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள கடன்கள் மற்றும் உதவிகளுடன் அடியெடுத்து வைத்தது. இது எரிபொருள், உணவு மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசிய பொருட்களை விரைவாக அனுப்பியது. 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நுகைு இனைப் பெறுவதற்கு கொழும்பை தகுதியுடையதாக்க IMF க்கு



தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...



10ம் பக்கத் தொடர்ச்சி...

தேவையான நிதி உத்தரவாதங்களையும் இந்தியா இலங்கைக்கு வழங்கியது.

இந்தியா வரலாற்று ரீதியாக இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக இருந்து வருகிறது, மேலும் SAARC அமைப்பில், இந்தியாவின் முக்கிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக இலங்கை தொடர்கிறது.

2020 ஆம் ஆண்டில், இந்தியா இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியாக இருந்தது, இருதரப்பு பொருட்களின் வர்த்தகம் சுமார் $3.6 பில்லியன் ஆகும்.

2000 ஆம் ஆண்டில் ஐஎஸ்எஃப்டிஏ நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து இந்தியாவிற்கான இலங்கை ஏற்றுமதிகள் கணிசமாக விரிவடைந்துள்ளன, சமீபத்திய ஆண்டுகளில் ஐஎஸ்எஃப்டிஏ நன்மைகளைப் பயன்படுத்தி இந்தியாவிற்கான மொத்த இலங்கை ஏற்றுமதிகளில் 60% க்கும் அதிகமானவை.

எவ்வாறாயினும், சமீபத்திய ஆண்டுகளில், இலங்கைக்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 5% மட்டுமே ஐஎஸ்எஃப்டிஏ விதிகளைப் பயன்படுத்தியது, இது இலங்கை சந்தையில் அவர்களின் ஒட்டுமொத்த போட்டித்தன்மையை வெளிப்படுத்துகிறது.

இந்தியா இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளி மட்டுமல்ல இது நாட்டிற்கு அன்னிய நேரடி முதலீட்டிற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாகும்.

பல புகழ்பெற்ற இந்திய வணிகங்கள் முதலீடுகளைச் செய்து, அங்கு செயல்பாட்டுத் தளங்களை நிறுவியுள்ளன. இந்தியன் வங்கியின் கூற்றுப்படி, 2005 முதல் 2019 வரை இந்தியாவில் இருந்து வந்த FDI மொத்தம் 1.7 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

பெட்ரோலியம் சில்லறை விற்பனை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், உற்பத்தி, ரியல் எஸ்டேட், தொலைத்தொடர்பு, வங்கி மற்றும் நிதி சேவைகள் ஆகியவை இந்தியாவின் முக்கிய முதலீடுகள்.

அதேபோன்று, இந்தியாவின் ஆற்றல்மிக்க பொருளாதாரம் மற்றும் பெரிய சந்தையை சாதகமாக்கிக் கொண்டு, இந்தியாவில் இலங்கை வணிகங்களின் முதலீடுகள் அதிகரித்து வருகின்றன.

இரு நாடுகளுக்கிடையிலான தொடர்பை மேம்படுத்துவதற்காக, இந்தியாவும் இலங்கையும் திறந்தவெளி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன, இது ஆறு இந்திய விமான நிலையங்களுக்கு வரம்பற்ற விமானங்களை இயக்குவதற்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அனுமதிக்கிறது.

### இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA)

இந்தியாவும் இலங்கையும் ஆற்றல்மிக்க மற்றும் விரிவடையும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன, அவை கணிசமாக வளர்ந்துள்ளன.

இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) 1998 இல் கையெழுத்தானது மற்றும் மார்ச் 2000 முதல் நடைமுறையில் உள்ளது.

2022 இன் முதல் ஒன்பது மாதங்களில், இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்ததை விட ஐந்து மடங்கு அதிகமாக இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கை நிதி அமைச்சின் அறிக்கையின்படி, இந்த ஏற்பாட்டின் கீழ் தீவு நாட்டின் ஏற்றுமதிகள் 140 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிகமாகும். இலங்கையில் இந்தியாவின் இறக்குமதி வெறும் 28 பில்லியன் ரூபாவாகும்.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடி இலங்கையைத் தாக்கியது, இதன் விளைவாக 2022 இல் வெளிநாட்டு கையிருப்பு வீழ்ச்சியின் காரணமாக இறக்குமதி குறைக்கப்பட்டது.

கூடுதலாக, இலங்கை பல பொருட்களின் இறக்குமதிக்கு வரம்புகளை விதித்துள்ளது. நெருக்கடியின் போது, உணவு, சுகாதாரம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பை உறுதிசெய்ய உதவும் வகையில் இந்தியா 4 பில்லியன் அமெரிக்க டாலர் மனிதாபிமான உதவியை வழங்கியது.

நவம்பர் 2022 இல், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் 2023 ஐ வெளியிட்டார், இது அடுத்த தசாப்தத்தில் வெளிநாட்டு வர்த்தகத்தை மும்மடங்காக்க கொழும்பு இலக்காகக் கொண்டுள்ளது, ஆண்டுக்கு 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

### கலாச்சார மற்றும் கல்வி உறவுகள்

இந்தியாவும் இலங்கையும் வரலாற்று, கலாச்சார, மத, ஆன்மீகம் மற்றும் மொழியியல் உறவுகளின் 2,500 ஆண்டு பாரம்பரியத்தைப் பகிர்ந்து கொள்கின்றன.

நவம்பர் 29, 1977 அன்று புது தில்லியில் இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களால் கையெழுத்திடப்பட்ட கலாச்சார ஒத்துழைப்பு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையே கால இடைவெளியில் கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சிகளுக்கு அடித்தளமாக செயல்படுகிறது.

இந்திய முதலீடுகள் தொடர்பாக இலங்கையர்களுக்கு சில தொடர்ச்சியான குறைபாடுகள் உள்ளன. சீனர்களுடன் ஒப்பிடுகையில், இந்தியர்கள் செயற்திட்டங்களை மெதுவாக நிறைவேற்றுவதாக அவர்கள் முறைப்பாடு கூறுகின்றனர். சீனாவின் முதலீடுகள் இந்தியாவுக்கு அருகில் உள்ள வடக்கு மாகாணத்திற்கு வெளியே இருக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிபந்தனைக்கு இலங்கையர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள தீவுகளில் யுஎனு-யின் நிதியுதவியுடனான மூன்று சீன எரிசக்தித் திட்டங்கள் இந்திய அழுத்தத்தின் காரணமாக பாதுகாப்பைக் காரணம் காட்டி ரத்து செய்யப்பட்டன.

இந்தியாவும் தன் பங்கிற்கு, இலங்கை துறைமுகங்களுக்கு சீன ”உளவு” கப்பல்கள் வருகை தருவது குறித்து மிகவும் உணர்திறன் கொண்டுள்ளது. இந்தியாவை சுற்றி வளைக்க சீனா விரும்புவதாக இந்தியா சந்தேகிக்கின்றது. இந்து சமுத்திரத்திலும் அமெரிக்கா தலைமையிலான குவாட் படையிலும் இலங்கை தனது பாதுகாப்பு எல்லையின் ஒரு பகுதியாக மாற வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது. ஆனால் இலங்கை புவிசார் அரசியல் போட்டிகளிலிருந்து விலகி இருக்க விரும்புகிறது.

கடன்கள் மற்றும் மானியங்களுக்குப் பதிலாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை இந்தியா விரும்பும் அதே வேளையில், இலங்கையர்கள் குறைந்த விலை இந்தியப் பொருட்களால் மிகைநிரம்பலும் இந்திய பணியாளர்களின் வருகையால் உட்புகுதலும் ஏற்படும் என்ற அச்சத்தில் இந்த ஒப்பந்தங்கள் குறித்து எச்சரிக்கையாக உள்ளனர். விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (ஊநுீய) மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (நுவஉஊய) ஆகியவற்றில் கையெழுத்திடுவதற்கான இந்தியாவின் முயற்சிகள் முடங்கியதற்கு இதுவே காரணமாகும். 1997 இல் இந்தியாவுடனான அநீதியானன குவயு ஒப்பந்தம் தொடர்பாக இலங்கையர்கள் இன்னமும் முணுமுணுத்துக் கொண்டிருந்தபோதிலும் இந்தியாவுக்கான இலங்கை ஏற்றுமதி அதிகரித்துள்ளதுள்ளதால் குவயு க்கு குறிப்பிடத்தக்க நன்றி கூறுகின்றது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போது இந்தியாவுடன் நுவஉஊய பற்றி பேசுகிறது. ஆனால் கடந்த கால அனுபவத்தைப் பொறுத்தவரை, இந்திய (மற்றும் பிற வெளிநாடுகள்) முதலீடுகள் இலங்கை தொழில்முனைவோர், தொழிற்சங்கங்கள் மற்றும் தேசியவாதிகளின் எதிர்ப்பிற்கு எதிராக செயற்படக்கூடும். கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்கான இந்தியா மற்றும் ஜப்பானுடனான ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கியமை ஒரு உதாரணமாகும். அண்மையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, விக்கிரமசிங்க அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு “சட்டப்பூர்வத்தன்மை இல்லை” என்பதனால் தமது அரசாங்கம் அதற்குக் கீழ்ப்படியாது என்று கூறி அதற்கான பணிகளில் குழப்பத்தை ஏற்படுத்தினார்.

இலங்கைக்கு எதிரான இந்தியாவின் கவனம் பெருகிய முறையில் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் சார்பானதாக இருந்தாலும், 13 ஏ சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலமாக தமிழ் பேசும் வடக்கு மற்றும் கிழக்கிற்கு அதிகாரப் பகிர்வு போன்ற உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளில் அது ஆர்வத்தை இழக்கவில்லை. இந்தியாவை மகிழ்விக்கும் வகையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க நீண்டகாலமாக நிலவி வரும் இந்தப் பிரச்சினை குறித்து தமிழ் கட்சிகளுடன் பேசி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இந்திய.... இலங்கை ஆகிய இரண்டு நாடுகளும் பண்பாடு மற்றும் கலாச்சார பின்னணியை கொண்டது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் சர்வதேச அளவில் உலகம் வெகு வேகமாக மாறி வருகிறது. இந்த மாற்ற ஓட்டத்தில் ஒவ்வொரு தேசமும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் பரஸ்பர தேவையாக இருக்கிறது. இந்த கால ஓட்டத்தின் சுழற்சியில் சிக்கி கொள்ளலாம் இறையாண்மை கொண்ட இரண்டு தேசங்களும் பரஸ்பரம் தங்கள் வர்த்தக மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இரண்டு தேசத்தின் மக்களின் அபிலாஷையாக இருந்து வரும் நிலையில் அது நிச்சயம் நிறைவேறும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை....!!

# பாணந்துறை இன்சயிட் கல்லூரியின் மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு விழா






(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பாணந்துறை இன்சயிட் கல்லூரியின் மாணவர்களின் வருடாந்த பரிசிளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (17) தெஹிவளை ஜெயசிங்க மண்டபத்தில் கல்லூ ரியின் பணிப்பாளர் ஸனீரா தாரிக்ஸாட் தலைமையில் இரு அமர்வுகளாக இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அகில இலங்கை தனியார் பாடசாலைகளின் சம்மேளன பொதுச் செயலாளர் திருமதி துசாரி கொரல்கே மற்றும் பாடசாலையின் அதிபர் மலிந்து டி சில்வா, பாடசாலையின் நிறுவுனர் தாரிக்ஸா உள்ளிட்ட உதவி அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாணவர்களின் கண்கவர் கலை நிக்ழவுகள் இடம் பெற்றதுடன் வகுப்பு ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## சிந்திப்போம் செயற்படுவோம்

எமது நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் முஸ்லீம்களுக்கான விவாக விவாகரத்துச் சட்டத்தை திருத்த வேண்டும் என்ற கோரிக்கையும், நடவடிக்கைகளும் பல தசாப்தங்களாக இருந்து வருகின்றன. இதற்கென திருத்தங்களுக்கான சிபாரிசுகளை முன்வைக்க அரசாங்கம் ஒரு குழுவை நியமித்தது. அக்குழு தன் முயற்சிகளை எடுத்து வந்த வேளையில் அதன் சிபாரிசுகளில் திருப்தியடையாது. சிலர் இணைந்து இன்னுமொரு குழுவை அமைத்துக் கொண்டு அது தனியான பாதையில் சென்று அறிக்கை தயாரித்தது.

இரண்டும் ஒன்றை ஒன்று பிழை கூறிக்கொண்டு சிபாரிசுகளை விமர்சிக்கத் தொடங்கின. இந்த இரு குழுக்களுக்கும் ஆதரவானவர்கள் அவற்றுடன் இணைந்தனர். முஸ்லீம்கள் இரண்டாக பிரியும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் குழு முஸ்லீம்களுக்கென்று தனியான விவாக சட்டம் தேவையில்லை. நாட்டில் இருக்கும் பொதுச் சட்டம் அனைவருக்கும் இருக்க வேண்டும் என்ற போராட்டத்தை ஆரம்பித்தது. இடையில் முஸ்லீம் தனியார் சட்டத்தை இல்லாதொழித்துவிட பாராளுமன்றத்தில் பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன. இந்த நிலையில் இரண்டு குழுக்களும் அமைதி காத்தன.

சஹ்ரான் குண்டுத் தாக்குதலுடன் வேகமாக செயல்பட்ட பிக்குமார் காலம் சென்றவுடன் முஸ்லீம்களுக்கெதிரான வேகத்தை குறைத்தனர். அதன் பின் மீண்டும் எமது குழுக்கள் வேலைகளை ஆரம்பித்தன. இரண்டும் தனித்தனியான செயல்பட்டன.

இரண்டு குழுக்களும் அவற்றோடு சார்ந்தவர்களும் ஊடகத்தைப் பாவித்து தனது கருத்துக்களை முன்வைத்தது மட்டுமல்ல மற்றக் குழுக்களின் கருத்துக்களுக்கு எதிர்ப்பாகவும் செயல்பட்டன.

எப்படியோ நீதி அமைச்சரிடம் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு நீதி அமைச்சும் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. இதற்கிடையில் இக்குழுக்கள் அரசியல் பிரமுகர்கள் மூலமாக நீதியமைச்சரை நெருங்கின. தத்தமது கருத்துக்களுக்கு அரசியல்வாதிகள் மூலம் அழுத்தம் கொடுத்தன. பெண்கள் அமைப்பு உட்பட பல அமைப்புக்களும் விடயத்தை விட்டபாடில்லை. கருத்து விமர்சனங்கள் தொடர்ந்தன. தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் ஓரளவு இரண்டு குழுக்களினது கருத்துக்களையும் சேர்த்து உடன்பாடான கருத்துக்களுடன் கூடிய தீர்மானத்துக்கு நீதியமைச்சு நடவடிக்கைகளை மீள ஆரம்பத்தது.

சட்டத் திருத்தங்கள் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும் நிலையில் மீண்டும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு குழுக்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினை திருமண வயது, திருமணத்திற்கு மணப்பெண்ணின் அனுமதி பெறல், காதிமார்களாக பெண்களை நியமித்து, பல திருமணங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் விவாகரத்தின்போது மணமகளுக்கான நட்டவீடு போன்ற முக்கிய விடயங்களுடன் இருந்தன.

நீதி அமைச்சு எதோ உடன்பாட்டுக்கு வந்திருக்கும் என்று மக்கள் நம்பியிருக்கும் நிலையில் மீண்டும் கருத்தாடல்கள் ஆரம்பிமாகியுள்ளன.

தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய பீடம் சனியன்று சட்டங்கள் தொடர்பாக ஆராய ஒரு மாநாட்டினை ஏற்பாடு செய்தது. இலங்கை பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய சட்டத்துடன் தொடர்புடைய தனிபீடம் தென் பிழக்கு பல்கலைக்கழகத்தில் உள்ளது. இந்த மாநாட்டை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஏற்பாடு செய்திருப்பதாக தகவல் வந்துள்ளது. இது தொடர்பான பத்திரிகை செய்திகளும் வெளிவந்தன. எனவே, இது ஒரு முக்கிய மாநாடு எனலாம்.

இதன் முடிவுகள் சிபாரிசுகள் எவ்வாறு அமையுமோ, என்பதுதான் பிரச்சினை.

இதற்கிடையில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் கூட்டமொன்றில் பேசுகையில் விமர்சனத்திற்கு உள்ளாகக் கூடிய கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

முஸ்லீம்கள் ஷாபி மத்ஹபின் கொள்கையை கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தால் முஸ்லீம் சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வர முடியாது போகும் என்பதே இவர் வெளியிட்ட கருத்தாகும்.

விவாக சட்டங்கள் தொடர்பன குழுக்களுக்கிடையே உள்ள கருத்து முரண்பாடுகள் மத்ஹபுகளுடன் தொடர்பானவையாகும். சிலர் ஷாபி மத்ஹபின் கொள்கையில் நிலையான உள்ளனர். சிலர் சில விடயங்களில் ஏனைய இமாம்களின் கொள்கைகளை ஆதரிக்கின்றனர். அவற்றை முன் வைக்கின்றனர். அது சரி என்கின்றனர்.

இமாம்கள் நால்வரும் கூறுவது இஸ்லாம் தான். வேற மார்க்கமல்ல. எனினும் ஒன்றுக்கொன்று சிறிய வித்தியாசங்கள் உண்டு. இவை அவரவர் கூறும் விளக்கவுரைகள் தொடர்பானவையாகும். எனினும் நான்கு இமாம்களும் குர்ஆன் ஹதீஸ்க்கு மாற்றலாக சொல்லவில்லை. அவற்றிற்கு விளக்கமளிக்கின்றனர். அளிக்கும் விளக்கத்தில் வேறுபாடுகள் இருக்கலாம்.

எனவே தான் நாம் ஷாபி இமாம் அவர்களின் கருத்துக்களைத்தான் பின்பற்றுவோம் என்று கூறினால் சட்டத்திருத்தம் வராது என்று ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

ரவுப் ஹக்கீமின் இந்தக் கருத்துக்கு பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து பிரசூரித்துள்ளது.

இந்தக் கருத்து தொடர்பாகவும் விமர்சனங்கள் வர இடமுண்டு.

இலங்கை வாழ் முஸ்லீம்களின் அதிபெரும்பான்மையினர் ஷாபி மத்ஹபைச் சேர்ந்தவர்கள். மிகச் சிறுபான்மையினது ஏனைய மதிஹவை பின்பற்றுபவர்கள்.

இலங்கை அரசாங்கமும், இலங்கை முஸ்லீம்கள் ஷாபி மத்ஹபைப் பின்பற்றுபவர்கள் என்ற கருத்தில் உள்ளது. இலங்கை முஸ்லீம்கள் தொடர்பான உள்ள சட்டங்களிலும் இது கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ரவுப் ஹக்கீமின் கருத்து உண்மையானது எனினும் விவாதத்திற்கு இடமளிக்கலாம்.

எனவே, விவாகச் சட்ட விடயம் வேறு பக்கத்திற்கு திரும்பலாம். சிலவேளை தாமதமாகலாம்.

சுருங்கக் கூறின் நிலைமை ஆரம்பத்திற்கே செல்லாம். மீண்டும் சவால்களை எதிர் நோக்கலாம். தூங்கிக் கொண்டிருக்கும் எதிர்ப்பாளர்களை எழுப்பி விடும் நிலையும் வரலாம்.



# மட்டக்களப்பு நகர பள்ளிவாசல்

# தமிழ் முஸ்லிம்களின் நற்புறவுச் சின்னம்






ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தென்னிந்திய பெருமக்கள் மட்டக்களப்பு நகர முகப்பாய் கம்பீரமாய் அமைந்திருக்கும் ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசலை அமைத்துத் தந்து தமிழ் முஸ்லிம் உறவுக்கும் இணைப்புப் பாலமாய் இருந்திருக்கிறார்கள் என்பது வரலாறு நெடுகிலும் காணக்ககூடியதாகவுள்ளது என காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அறபுக் கல்லூரியின் நிருவாக செயலாளரும் ஹாபிழ்கள் ஒன்றியத்தின் ஆலோசகருமான மார்க்க அறிஞர் கலாபூஷணம் எம்.எச்.எம். புஹாரி தெரிவித்தார்

மட்டக்களப்பு மாநகர முஸ்லிம் சமூக சேவை இன நல்லிணக்க அமைப்பின் கூட்டமும் ஜ/ம்மாப் பள்ளிவாசல் ஜமாஅத்தாரின் சங்க ஒன்று கூடலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.02.2024) காத்தான்குடி அல்மனார் கல்லூரியில் இடம்பெற்றது.

அமைப்பின் செயலாளர் எம்.எஸ்.எம். அப்துல் காதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சட்டத்தரணிகள், மார்க்க அறிஞர்கள், சமூக சேவையாளர்கள், செயற்பாட்டாளர்கள், பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய சன்மார்க்க அறிஞர் புஹாரி அவர்கள், மட்டக்களப்பில் ஆயுத முரண்பாடுகள் வன்முறைகள் இடம்பெற்றபோதும் கூட இந்தப் பள்ளிவாசல் தமிழ் முஸ்லிம் உறவின் முத்தாய்ப்பாய் விளங்கியது என்றால் அதன் சிறப்பம்சம் தெளிவாகத் தெரிகிறது.

மட்டக்களப்பு நகர ஜாமியுஸ்ஸலாம் நகர பள்ளிவாசலை அமைத்து மிகச் சிறப்பாக நிருவகித்து அதற்காக மிகக் கடுமையாக உழைத்தவர்கள் அனைவரும் தென் இந்திய காயல்பட்டினத்தைச் சேர்ந்த பெருமக்களேயாகும்.

அவர்கள் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். அவர்கள் செய்த சிறப்பான பணி இந்த அழகான பள்ளிவாசலை மிகச் சிறப்பான இடத்திலே அமைத்ததாகும். இந்தப் பள்ளிவாசல் முஸ்லிம்களுக்கான வணக்க வழிபாட்டுத் தலமாக மட்டுமில்லை. இது தமிழ் முஸ்லிம் நல்லுறவின் சின்னமாகவும் திகழ்கிறது.

மட்டக்களப்பு மாநகரிலே தமிழ் முஸ்லிம் நல்லுறவுக்கான ஒரு இஸ்லாமிய சின்னத்தைப் பார்க்க வேண்டுமானால் அது மட்டக்களப்பு நகர முகப்பாய் கம்பீரமாய் அமைந்திருக்கும் ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாசல்தான்.

மட்டக்களப்பில் ஆயுத முரண்பாடுகள் வன்முறைகள் இடம்பெற்றபோதும் கூட இந்தப் பள்ளிவாசல் தமிழ் முஸ்லிம் உறவின் முத்தாய விளங்கியது என்றால் அதன் சிறப்பம்சம் தெளிவாகத் தெரிகிறது.

புண்ணிய தலம் இந்தப் பள்ளிவாசல் அமைந்திருக்கின்ற இடம் முக்கியமான ஸ்தலம், மத்திய இடம். கச்சேரி, நீதிமன்றம் மாநகர சபை, பொது
நூலகம் பிரபலமான பாடசாலைகள், பிரபலமான மைதானம், கிழக்கு மாகாண அஞ்சல் தலைமையகம், வங்கிகள் நகர கடைத்தொகுதிகள் என்பனவற்றுக்கு மத்தியில் அமைந்திருக்கின்ற இந்தப் பள்ளிவாசல் மிக முக்கியமான இடமாகும்.

அதனால்தான் இது இன நல்லுறவின் சின்னமாகத் திகழ்கிறது என்று கூறுகின்றோம்.

அதையும் விட அந்தப் பள்ளிவாசலுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இந்த நாட்டிலே இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் உருவாக, அல்குர்ஆனை மிகச் சிறுவயதிலே மனனமிட்டு இந்தப் பள்ளிவாசலிலே தலைமை தாங்கி தொழுகை நடத்திய



ஒரு சிறுவனின் செயலால் இந்தப் பள்ளிவாசல் 1969இல் முன்னோடி யாகத் திகழ்ந்திருக்கிறது.

அந்தச் சின்னப் பையன்தான் பின்னாட்களில் ஹாபிஸ் எனப் பட்டத்தைச் சுமந்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சராகவும் சுற்றாடல்துறை அமைச்சராகவும் இருந்த ஹாபிஸ் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் அவர்கள்

அவரின் செயலால் தூண்டப்பட்டதன் காரணமாகத்தான் வைராக்கியம் கொண்டு காத்தான்குடியிலே 1971ஆம் ஆண்டில் அல்குர்ஆன் மனன வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகர பள்ளிவாசலில் 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகச் சிறிய வயதிலே புனித றமழான் மாதத்தில் ஒரு சின்னப் பையன் அருமையாக சிறப்பாக தொழுகை நடத்தினார்.

இதனை அவதானித்த தென்னிந்திய பேறறிஞர் சேஹ் அலி ஹாபிஸ் இந்த சந்தர்ப்பத்திலே அங்கிருந்த தொழுகையாளிகள் மத்தியில் உருக்கமாகப் பேசினார். இந்த சின்னப் பையன் ஹாபிஸாக இவ்வளவு நேர்த்தியாக தலைமையேற்றுத் தொழுகை நடத்தும்போது ஏன் காத்தான்குடியிலிருந்து ஹாபிஸ்கள் உருவாகவில்லை என்று அவர் கேள்வி எழுப்பினார்.

அந்த வைராக்கியம்தான் காத்தான்குடியில் 1971ஆம் ஆண்டிலே முத்துவாப்பா ஆலிம் அவர்களால் அல்குர்ஆன் மனன வகுப்பு ஆரம்பிக்க வழிவகுத்ததோடு இந்த நாட்டிலே ஹாபிஸ்கள் உருவாவதற்கு காரணமாக இருந்தது மட்டக்களப்பு பள்ளிவாசல்தான்.

ஏறாவூரிலே அல்குர்ஆனுக்கு விழா எடுக்கின்ற நிகழ்வில் நான் கலந்து கொண்டு ஏறாவூரைச் சேர்ந்த சிறுவன் ஒருவன்தான் அல்குர்ஆனை மனதில் சுமந்து முழுக் கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்த்தவர் என்று உரையாற்றி அமர்கின்ற பொழுது "நான் தான் அந்தச் சிறுவன் ஹாபிஸ் நஸீர் அஹமட்" என்று அவர் என் முன் தோன்றி தன்னை அறிமுகப்படுத்தி நின்றது இப்பொழுதும் நெஞ்சம் நிறைந்த நினைவாய் இருக்கின்றது.

அல்குர் ஆனுக்கு விழா எடுத்த சந்தர்ப்பத்திலும் அவர் ஒரு சிறுவனாக ஒரு மூலையில் நின்று கொண்டு நிகழ்வுகளை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்திருக்கின்றார் என்பது பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கின்றது.


இது வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிது. இப்பொழுது ஆயிரக்கணக்கான ஹாபிஸ்களை நாம் உருவாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறந்த விருதுகள் பாராட்டுக்கள் கௌரவங்கள் பெற வழி சமைத்திருக்கிறோம்" என்றார்.








நாச்சியாதீவு
பர்வீன்




# கீறல் 9ம் இதழ் குறித்து...

முத்திங்கள் வெளியீடாக ஒலுவில் மின்னல் வெளியீட்டகத்தின் முயற்சியில் சற்று நீண்ட இடைவெளியின் பிறகு அழகிய முன்னட்டைப் படத்துடன் 350ஃஸ்ரீ இலங்கை விலை தாங்கி கீறல் வெளிவந்துள்ளது. அஸீஸ் எம் பாயிஸ் மற்றும் நிழாம் ஆகியோரின் இடைவிடாத முயற்சியுடன் பேராசிரியர் அய்யூப் அவர்களது ஆலோசனையுடன் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இலங்கையில் சஞ்சிகைகள் வெளிவரும் பொதுவான அகன்ற அளவிலன்றி கைக்கடக்கமான முறையில் எங்கும் சுமந்து செல்லும் வகையில் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோடை காலம் தாண்டி பொழியும் மழை போல சில சஞ்சிகைகள் தலைதூக்கி சட்டென மறைவதுண்டு. முகவரி தொலைத்து காணாமலே போவதுமுண்டு. இலங்கையில் கடந்த காலங்களில் தொடராக வெளிவந்த சில சஞ்சிகைகள் வந்த வேகத்தில் அப்படியே புதைகுழிக்குள் சென்றுவிட்டது போன்ற நிலை. அவை மீண்டும் தலை தூக்கவே இல்லை. எதிர்பார்த்தும் பயனில்லை.

ஆனால் கீறல் பல சவால்களுக்கு மத்தியிலும் 9 வது இதழைப் பிரசவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆக்கங்கள் குறித்த தலைப்பும் பக்கமும் எழுத்தாளர்களும் வாசல் பகுதியில் எப்படியாவது அடக்கப்பட வேண்டும் என்பதற்காக நிரப்பபட்டிருப்பது சிக்கனமாக இருப்பினும் சுலபமாக வாசிக்குமளவு வசதியாக இல்லை. ஆனாலும் அடுத்தடுத்த பக்கங்கள் வாசிக்கும் வகையில் சநயனயடிடந அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தத்தமது தெரிவு பிரியம் ஈடுபாடு என்பவற்றுக்கு அமைய முன்னுரிமைப்படுத்தி வாசிக்கும் வகையில் கட்டுரை, சிறுகதை, கவிதை, நூலறிமுகம், சஞ்சிகை அறிமுகம், அறிவியல்இ வரலாறு என பிரதிகளை வகைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சம் எனலாம். 35 கவிதைகள் சஞ்சிகையை நிரப்பியுள்ளன. கீறல் என்பதால் என்னவோ ஒவ்வொரு ஆக்கமும் அறிமுகப்பக்கத்தில் இரத்தத்துளி சொட்டுசொட்டாக விழுவது போல அமைகிறது. இடைக்கிடையே துணுக்குகள்இ புதுமையான தகவல்கள் சஞ்சிகைக்கு அணி சேர்ப்பது அழகு.

நஸ்புல்லாஹ்வின் கவிதை குறித்து பேராசிரியர் அய்யூப் அவர்கள் எழுதும் பட்டாம்பூச்சி விளைவுக் கோட்பாட்டு விளக்கம் கீறலின் மீது மட்டுமல்ல சகல வகை வாசிப்பின் மீதும் கவனம் குவிய வேண்டும் என்பதனை உணர்த்தி சஞ்சிகைக்குள் அழைத்துசெல்வதாக உணர்கிறேன்.நான் ஓர் ஆபிரிக்கன் எனும் மொழிபெயர்ப்புக்கவிதையை தருகிறார் கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீன். ஆப்ரிக்கா மீதான ஒருவித ஈர்ப்பை அது உண்டாக்கி விடுவதாக உள்ளது.

பாயிஸின் ஊசி புரிந்துணர்வின்றி சந்தேகத்துடன் வாழும் சகல தம்பதிகளையும் நன்றாகவே குத்திக் கீறி விடுகிறது. 8ம இதழிலும் ஊசி குறித்த ஒரு பதிவு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கீறலுக்குள் அவரி சஞ்சிகை வந்திருப்பது கீறலின் தாரளத்தன்மையை பகட்டின்றி வெளிக்காட்டுகிறது. சின்னச்சின்ன கவிதைகளும் கதைகளுமாய் கீறல் தன் களத்தை அழகுற நிலைப்படுத்தியுள்ளது இலக்கிய உலகில்.

நாத்திகம் குறித்த நீண்ட கட்டுரை ஒன்றை தொடராக எழுத ஆரம்பித்துள்ளார் ரிஸான். பாலஸ்தீன் இஸ்ரேலிய சூடான நிலைமைகள் குறித்தும் ஒரு சில கவிதைகள் பேசுகின்றன. மிஷ்காத் நிறுவனத்தின் கூட்டு முயற்சியாக வெளிவந்துள்ள "இஸ்லாமிய சட்டப் பின்னணியில் குடும்ப பொருளாதாரப்பராமரிப்பு" நூல் குறித்தும் அதன் உள்ளடக்கம் அவசியப்பாடுகள் பின்னணி தேவைகள் குறித்தும் அலசப்பட்டுள்ளது.

நூலுக்கு தனியான எழுத்தாளர் இல்லை. மிஷ்காத்தின் கூட்டு முயற்சி இது. நூலின் உள்ளடக்கம் தேவை குறித்த விபரிப்புகள் வாசகர்களை ஈர்த்து விட எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சொல்லன்பன் நஸ்ருதீனின் புலால் வாசம் குறித்தான அகன்ற பார்வையை விரிவுரையாளர் அப்துர் ரஸ்ஸாக் முன்வைக்கிறார்.

சமூக மாற்றத்துக்கு கல்வியின் பால் நாட்டம் கொள்வதே ஒரே தீர்வு என்பது நாவல் வழியாக சொல்லப்படுவதை வலியுறுத்துகிறார். ஜின்கள் குறித்தான சுவையான சுவாரஷ்யமான தொடர் ஒன்றை ஆரம்பித்துள்ளார் சஞ்சிகையின் உதவி ஆசிரியர் நிலாம் அவர்கள். ஆக்கம் இஸ்லாமிய நிழலில் உள்ளதால் அது குறித்த சந்தேகங்களை தெளிவுபடுத்துவதாகவும் உள்ளது. கவிஞர் ஜமீலின் இரண்டு அழகிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கீறலின் முன்னைய இதழ் குறித்த முழுமையான ஒரு பார்வையை எஸ்.எல். மன்சூர் அவர்கள் செலுத்தியுள்ளார்கள். நிந்தவூர் பர்ஸானாவின் " எல்மிராவின் கடிதங்கள்" தான் சஞ்சிகையின் நீண்ட சிறுகதை எனலாம். வித்தியாசமான பாத்திரங்களையும் கதைக்கருவையும் கொண்டதாக சிறுகதை உள்ளது.

ஆக மொத்தத்தில் கீறல் பனிவிழும் சாரலாக இலக்கிய ஆர்வலர்களுக்கும் வாசகர்களுக்கும் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. 10 ம் இதழ் இன்னும் புது அம்சங்களுடன் மிளிர வாழ்த்துக்கள்.

அஷ்ஷெய்க் பிஸ்தாமி அஹமட்,
மல்வானை.

# கல்பில் கிடந்த கவிதை

*எச்.ஏ. அஸீஸ் அற்புதமான கவிதைகளின் அனந்தக்காரர்... ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆழமான எடுகோள்களை எடுத்து எழுத்தாள்பவர். அகலிப்பான வாசிப்பும் ஆழ்மனத்தேடலும் மீக்குற்றவர்.... தன் வெளிநாட்டுதூதுவர் பணி காரணமாக அடிக்கடி எழுத முடியா விட்டாலும் தன் அற்புதமான எழுதுகோலை இடையிடையே கவிதைக்காக திறந்து விடுவதுமுண்டு.*

*இவரது, "ஐந்துகண்டங்களின் மண்" என்ற ஒரு பெறுமதிமிக்க கவிதை நூல் ஒன்று வெளிவந்துள்ளது.*

*அவரது இந்தக் கவிதை அவரது முகநூலிலும், என் கல்பிலும் கிடந்தது.*

*அவரிடமிருந்து மென்மேலும் எதிர்பார்க்கின்றோம்.*

-தீரன். ஆர்.எம்.நௌசாத்-

## குன்" என்று சொன்ன உன்னை குதூகலித்துத் துதிப்பேனா!

உன்னோடு நேரடியாய்
உரையாட வேண்டும்
திரை எதுவுமில்லாது
வரையறையு மில்லாது

உன் அரிய சந்நிதியில்
ஒரு துகளாய் இருப்பேனா
பொன் பொருளும்
பொருளற்ற
புண்ணியத்தில் தரிப்பேனா
"குன்" என்று சொன்ன
உன்னை

குதூகலித்துத் துதிப்பேனா
தொட்டறிந்து தெளியாத
மென்பொருளைப் போல
கட்டமைப்பை
விட்டெறிந்து மின்னலையின்
மெய்ப்பொருளாய்
தெரிவேனா

திரை எதுவுமில்லாது
வரையறையுமில்லாது
உரையாட வேண்டும்
உன்னோடு நேரடியாய்

# குறியீடுகளில் படிந்திருக்கும் நிழல்கள்



பழசு புதுசு என எத்தனை
வண்ணங்கள் இருப்பினும்
ஆதி வேர்களிலிருந்து
குவிகிறது வாசம்

அம்மிக் கல்லை
திரும்பிப் பார்க்கும் மனதை
திருப்பியெடுக்க
கடினமாய் இருக்கிறது
ஒரு வாழ்க்கை முழுக்க
நேசித்துக் கொண்டிருக்க வேண்டிய
நெருக்கம்
தூரமாகின்றபோது
விழிகள் ஈரமாகின்றன
அது தவிர்க்க முடியாததும் கூட..

இதயத்தை சமீபித்து
ஈர நினைவுகளை மீட்டியபடி..
வசிப்பகத்தின் ஒவ்வொரு
செங்கல்லிலும்
ஒரு வியர்வைத்துளி
உலராமல் ஒட்டியிருக்கிறது
காலம் பார்த்துப் பார்த்து
விரிசலற்ற உறவுகளுக்குள்
மதகுகளை வெட்டி விட்டாலும்
சுவர்களை முட்டிக்கொண்டு
திரும்பும் நினைவுகளை
வெறுமனே
விட்டுச் செல்ல முடிவதில்லை.

அடுத்த தெருவிலிருந்து.....
அக்கா இன்று பெரும் மழையில்

பிரியங்களின் பிடிக்குள்
ஞாபகங்கள் சுமந்து
நனையாமல் வந்திருந்தாள்
அக்கணமே ஒட்டுப் போட்ட
ஒரு குடை கம்பியிலிருந்து
ஒரு கடல் என் கண்களுக்குள்
இறங்க தத்தளிக்கிறேன்

பார்வைக்கெட்டிய தூரம்வரை
பச்சிலைகளால் செறிந்திருக்கும்
செழுமையான இவ்வெளி துளிர்த்து
எனக்குள் வேர்கள் பூக்க
பெரு நிழல் விரிகிறது

செல்லா காசாகிப்போகாமல்
பெறுமதிமிக்கதாக்கி
தன் உழைப்பை
நாணயமாக மாற்ற
இந்த மண்ணில்
மண்வெட்டியுடன் எமக்காய்
எத்தனை புரண்டிருப்பார்கள்
அப்பா அம்மா!

-ரோஷான் ஏ.ஜிப்ரி-







**வை .எம்.எம்.ஏ. மாத்தளை கிளையின் ஏற்பாட்டில் வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 12 பேருக்கான கத்னா வைபவமொன்று வைத்தியர் எம் பாஹிமினால் கொங்காவல வாசிகசாலை மண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பட்டதுடன் அவர்களுக்கான சக்தி உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன இதன்போது வை.எம்.எம்.ஏ.யின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.**

# எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2024




*கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற இருக்கின்ற கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 08ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணி தொடக்கம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*எனவே அனைத்து பழைய மாணவர்களும் தவறாது இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.ஐ. யாகூப் கேட்டுக் கொள்கின்றார்.*

# இந்தியா போன்று இலங்கை முஸ்லிம்களுக்கும் அஷ்ரபினால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியே முஸ்லிம் காங்கிரஸ்

## முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா



திருச்சி. ஷாகுல் ஹமீட்



முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவுடன் உதயம் பத்திரிகையின் சிரேஸ்ட ஊடகவியலாளர் திருச்சி எம்.கே. சாகுல் ஹமீத் மேற்கொண்ட நேர்காணலில் தொகுப்பு:

**கேள்வி: உங்களைப் பற்றிய அறிமுகத்தினை கூறுங்கள்?**

பதில்: கிழக்கு மாகாணம் காத்தான்குடியைச் சேர்ந்த நான்; மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தொகுதியில் 1989 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையின் முதலாவது மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன். அதே சமயம் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு அதன் பின்னர் மாகாண அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், ராஜாங்க அமைச்சர், கெபினட் அமைச்சர் போன்ற பொறுப்புக்களை வகித்து மக்களுக்கு பல்வேறு சமூக சேவை பணிகளை திறன்பட செய்து வந்தேன். மேலும் நான் வகித்த கிழக்கு மாகாண ஆளுநர் பதவி மூலம் கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் அனைத்து சமூக மக்களுக்கும் பல்வேறு பணிகளை செய்துள்ளேன். தற்போது நான் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஒன்றை நடத்தி வருவதோடு, எனது ஆரம்பக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித்தலைவராகவும் பணியாற்றுகின்றேன்.

**கேள்வி: நீங்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டீர்கள் அப்போதையே உங்கள் மனநிலை என்ன?**

பதில்: இந்தியாவில் முஸ்லிம்களுக்கென இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என்ற கட்சி காயிதே மில்லத் முகமது இஸ்மாயிலினால் ஆரம்பிக்கப்பட்டது போன்று இலங்கையிலும் முஸ்லிம்களுக்கென ஒரு தனியான கட்சி ஆரம்பிக்க வேண்டும் என காலம் சென்ற தலைவர் மர்ஹூம் எம்.எச். எம் அஷ்ரபினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி உருவாக்கப்பட்டது. இது இலங்கையில் முஸ்லிம்களுக்கென ஒரு தனி அரசியல் அடையாளமாக கருதப்பட்டது.

நாங்கள் ஒரு குறுகிய காலத்துக்குள் அதிகமான பணிகளை செய்து சில வெற்றிகளை கண்டோம். 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டபோது நான்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எம்.எச். எம்.அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், சுந்தரமூர்த்தி அபூபக்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் உறுப்பினராக புஹார்தீன் ஹாஜியார் தெரிவு செய்யப்பட்டார். இவர்களில் தொடர்ந்தும் அரசியலில் பயணிப்பது நான் மாத்திரமே.

**கேள்வி: உங்கள் அரசியல் காலத்தில் மறைந்த தலைவர் எம்.எஸ்.எம். அஷ்ரப்போடு நீங்கள் பயணித்த வேளை உங்களால் மறக்க முடியாத இரண்டு சம்பவங்களை கூற முடியுமா?**

பதில்: குறிப்பாக மறைந்த தலைவர் அஷ்ரப் சமூகத்தின் உரிமை விடயத்தில் பக்குவமாக செயல்படக்கூடியவர். அவரோடு நான் பழகிய காலத்தில் இனரீதியாக செயற்பட்டது கிடையாது. முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் விட்டுக் கொடுக்கவும் மாட்டார். இதன் அடிப்படையில் இரண்டு சம்பவங்களை என்னால் கூறமுடியும் . அதில் 1989 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இலங்கை ஜனாதிபதிக்கு எமது ஆதரவு தேவைப்பட்டது. அப்பொழுது ஆர். பிரேமதாச மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக இருந்தார்கள். நாங்கள் சினிமாவை பண்டாரநாயக்காவுக்கு ஆதரவாக செயல்பட்டு தங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்தோம். இருந்தாலும் எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இருந்த சமயத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கட்சியில் இருந்த சில தமிழ் தலைமைகள் அதனை எதிர்த்தார்கள். முஸ்லிம்களின் உரிமைகளை தர மறுக்கும் கட்சியில் அஷ்ரப் தொடர்ந்து இருக்க விரும்ப மாட்டார். மிக நீண்ட காலமாக சிறிமாவின் கட்சியில் உயர்ந்த பதவிகளை உயர்த்த இவர் தனது கோரிக்கையை ஏற்காததனால் அக்கட்சியை விட்டு வெளியேறினார்.

இதனையடுத்து ஜனாதிபதி வேட்பாளர் ஆர். பிரேமதாசா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபை பேச்சுவார்த்தையில் ஈடுபட அழைத்தார். அப்ப பேச்சுவார்த்தையில் நானும் கலந்து கொண்டேன்.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு சட்டமொன்று காணப்பட்டது. அதாவது இலங்கையில் 12.5 வீதம் வாக்குகள் எடுக்காவிட்டால் எந்த ஒரு சிறிய கட்சியும் பாராளுமன்றம் வர முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட 20 வீதமான முஸ்லிம்கள் மட்டுமே இருந்தார்கள். இதனால் ஏனைய மாவட்டங்களில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கூட பெற முடியாத சூழ்நிலை காணப்பட்டது. அன்றைய பிரதமராக இருந்த பிரேமதாசாவிடம் எம். எச்.எம்.அஷ்ரப் இவ்விதாசார முறையை உடனடியாக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

ஒரு சட்டம் அமல்படுத்தப்பட வேண்டுமானால் இலங்கையில் பல நிபந்தனைகள் காணப்படுகின்றது. அவற்றை செயல்படுத்த ஒன்று அல்லது ஒன்றரை வருடம் ஆகலாம். அன்றைய பிரதமரின் பதவிக்காலம் ஒரு நாள் மட்டுமே காணப்பட்டதனால் இதனை எவ்வாறு சாத்தியப்படுத்துவது என எம்.எச். எம்.அஷ்ரப் ஆராய்ந்து கொண்டிருந்தார். இதனை அடுத்து மறைந்த தலைவர் அஷ்ரப் விகிதாசாரத்தை 5 வீதமாக பாராளுமன்றத்தில் திருத்தியமைத்து தந்தால் மட்டுமே நாங்கள் உங்களுக்கு வாக்களிப்போம் என கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாசா இரவோடு இரவாக உச்சநீதிமன்றத்தினை அழைத்து அதனை உடன் ஐந்து விதமாக மாற்றி அரச ஆணையை வெளியிட்டார். இதன் காரணமாகவே இலங்கை பாராளுமன்றத்தில் கணிசமான முஸ்லிம் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது மறைந்த தலைவர் அஷ்ரபின் சாதனையாகும் இதனை என்னால் மறக்க முடியாது.

அப்போது ஜனாதிபதி வேட்பாளராக காணப்பட்ட ரணசிங்க பிரேமதாசாக்கு ஆதரவு வழங்கிய தலைவர் அஷ்ரபிடம் “தேர்தலுக்கு நிறைய செலவுகள் ஆகுமே? உங்களுக்கு ஏதும் தேவைகள் இருக்கின்றதா?” என கேட்டபோது “இப்பொழுது எங்களுக்கு எதுவும் தேவையில்லை. நாங்கள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவோம். அதன் பிறகு ஜனாதிபதியான உங்களை சந்தித்து எங்களது கோரிக்கைகளை டொன் என முன் வைப்போம்” என்று கூறினார்.

அடுத்ததாக விடுதலைப் புலிகளின் அட்டகாசம் இலங்கையில் காணப்பட்டபோது பல்கலைக்கழகங்கள் யாழ்ப்பாணம் போன்ற தமிழ் பிரதேசங்களில் இருந்தமையினால் அவற்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஏராளமான முஸ்லிம் மாணவர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு உட்பட்டதோடு சிலர் கொலை செய்யப்பட்டுமிருந்தனர். இதன் காரணமாக அச்சமடைந்து மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கை இடை நிறுத்திக் கொண்டனர். அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அமைச்சரும் நானும் நேரில் சந்தித்து பேசினோம். இது குறித்து நாங்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறி எங்கள் சமுதாய மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லை இதனால் தனியான ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். இதனை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் “யாருக்கும் இனரீதியான ஒதுக்கீடுகள் வழங்கப்படக் கூடாது” என தெரிவித்து அதனை தடுத்து விட்டனர்.

உடனடியாக ஜனாதிபதி கல்வி அமைச்சரை அழைத்து இது பற்றி கலந்தாலோசனை செய்து முடிவை எடுக்குமாறு கூறினார். அப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த தமிழ் தலைவரான சம்பந்தன் மற்றும் ஜோசப் ராஜசிங்கம் ஆகியோர் “உங்கள் மாணவர்களுக்கு நாங்கள் முழு பாதுகாப்பை அளிக்கிறோம்” என்று உறுதி அளித்தானர். அதற்கு பதில் அளித்த தலைவர் ”எங்களுக்கு பிரச்சினை நீங்கள் இல்லை. விடுதலைப் புலிகள் தான். அவர்கள் தான் எங்கள் மக்களை கொலை செய்கின்றார்கள். திடீர் தாக்குதல் நடத்திய அச்சுறுத்துகின்றார்கள். எனவே நீங்கள் உறுதிமொழி தருவதை விட விடுதலைப்புலிகள் சார்பில் நாங்கள் உறுதிமொழி தருகிறோம் என்று உத்தரவாதம் தாருங்கள். நாங்கள் எங்கள் மாணவர்களை பள்ளிக்கூடங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தயங்காமல் அனுப்பி வைக்கின்றோம் என்று கூறினார்.

அதற்கு அவர்கள் அது எங்களால் இயலாது என்று கூறிவிட்டனர். மேலும் தலைவர் அஷ்ரப் எங்களுக்கு தனி பல்கலைக்கழகம் பெற வேண்டும் என்பதெல்லாம் நோக்கம் அல்ல எங்கள் மாணவர்கள் அச்சம் இல்லாமல் பல்கலைக்கழகங்களுக்கு சென்று பாடம் பயில வேண்டும். அதற்குரிய பாதுகாப்பு உறுதி மொழியை யாரால் அச்சம் நிலவுகின்றதோ அவர்களே தர வேண்டும். அப்படியானால் விடுதலைப்புலிகள் தான் தர வேண்டும். எனவே அவர்கள் தர மாட்டார்கள். இதனால் அரசாங்கத்திடம் நாங்கள் தனி பல்கலைக்கழகத்தை அமைத்து தர கோர்கின்றோம் என்று கூறினார். இதனை புரிந்து கொண்ட கல்வி அமைச்சர் இந்தப் பிரச்சினையை தீர்க்க நீங்கள் விரும்பும் இடத்தில் பல்கலைக்கழகத்தை உடனடியாக அமைத்து தருவதை தவிர வேறு வழியில்லை என்று கூறி அதற்கான பரிந்துரையினை அரசிடம் முன் வைத்தார். இதன் அடிப்படையில் தான் ஒலுவில் பிரதேசத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இது எனது அரசியல் பயணத்தில் நான் கண்ட மிகப்பெரிய சாதனையாகும். இதனை என்னால் மறக்கவே முடியாது.

**கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அரசியல் பணி செய்தீர்கள் பிறகு மனக்கசப்பு காரணமாக அதிலிருந்து வெளியேறினீர்கள். முஸ்லிம் காங்கிரஸில் இருந்த போது பெற்ற அறிவும், வெளியேறிய பிறகுள்ள உங்கள் அரசியல் பயணம் குறித்து கூறுங்கள்?**

பதில்: முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை விட்டு நான் வெளியேறவில்லை அதில் இருந்த தலைவருக்கும் எனக்கும் இருந்த சில முரண்பாடு காரணமாகவே ஒதுங்கி இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. முஸ்லிம் சமூகம் சார்பாக நான் முன்வைத்த சில கோரிக்கைகளை நிறைவேற்ற காலதாமதம் ஏற்பட்டது. அவ்வாறான சூழலில் ஏற்பட்ட முரண்பாடு என்னை அதிலிருந்து ஒதுங்க செய்தது. பின்னர் 2008 ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட 15 ஆண்டு காலம் மஹிந்த ராஜபக்சே மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் கட்சியில் இணைந்து கொள்ளாமலே அரசியல் பணியாற்றினேன்.

**கேள்வி: பொதுவாக ஒரு கட்சியில் செல்வாக்குடன் இருப்பவர்கள் அதிலிருந்து பிரிந்து விட்டால் உடனடியாக இன்னொரு கட்சியை தொடங்குவது அல்லது ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய கட்சியில் இணைவது வழமை ஆனால் இவ்விரண்டையுமே நீங்கள் செய்யாமல் நீண்ட காலம் தனியாக அரசியல் செய்து மீண்டும் தனது கட்சியிலேயே இணைந்து விட்டீர்கள் ஏன் நீங்கள் தனி கட்சி தொடங்கவில்லை அல்லது வேறு கட்சியில் இணையவில்லை?**

பதில்: என்னுடைய கட்சியின் முஸ்லிம் காங்கிரஸ் தான் அதில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. நீங்கள் கேட்டதற்கு இதே கேள்வியைத்தான் பலர் என்னிடம் கேட்டனர். எவ்வளவு முக்கிய பதவிகளில் இருந்தாலும் தனியான ஒரு அரசியல் கட்சியை தொடங்க வேண்டும் என்ற சிந்தனை எனக்கு வரவில்லை. காரணம் முஸ்லிம் சமுதாயத்திற்கென்று இலங்கையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இருக்கிறது அதை தவிர்த்து கூடுதலாக இன்னொரு கட்சியை தொடங்குவது வரலாற்று பிழையாகும் என்பதில் நான் தெளிவாக இருந்தேன். அது மட்டுமல்ல முஸ்லிம் சமுதாயத்தில் எங்களுக்கு இருந்த அரசியல் வலிமையை கொண்டு என்னதான் நல்லதை செய்தாலும் நாங்கள் பெரும் கட்சியோடு இருக்கின்றோம் என்று தான் மக்கள் பேசிக் கொள்வார்கள். சமுதாயத்தின் அரசியல் பிரதிநிதியாக அவர்கள் எங்களை ஏற்பதில்லை. ஆக சமுதாயத்துக்கு எதையாவது ஒன்று செய்ய வேண்டும் என்றால் சமுதாய இயக்கத்துடன் இணைந்து செயல்பட்டால் தான் அது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதியே நான் அந்த முடிவுக்கு வந்தேன்

**கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்ட போது உங்களுக்கு கட்சி எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்துள்ளது?**

பதில்: கட்சியில் எனக்கான முக்கியத்துவம் தலைவரால் தரப்பட்டிருக்கிறது. அதாவது கட்சியின் பிரதி தலைவர் என்ற பொறுப்பு தரப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் விவகாரங்கள் குறித்தும் சமூகப் பிரச்சினைகள் உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்தும் தலைவரும் நானும் அடிக்கடி பேசி நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். எனவே கட்சியில் எனக்கு உரிய முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதாகவே நான் கருதுகிறேன்.

**கேள்வி: கட்சியை விட்டு பிரிந்து நீங்கள் மீண்டும் இணைந்தது உங்கள் தனிப்பட்ட முடிவா? அல்லது வேறு யாரினதும் தூண்டுதலின் அடிப்படையிலா?**

பதில்: மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளுங்கள் என்று தலைவர் அழைக்கவும் இல்லை. நானாக சென்று சேரவும் இல்லை. கட்சியை விட்டு பிரிந்த பிறகு மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சியை பாதுகாப்பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் தகுந்த சரியான ஆளுமை தேவை என்ற நிலை உருவானது. அந்த இடைவெளியை என்னால் மாத்திரமே பூர்த்தி செய்ய முடியும் எனக் கருதிய அங்கத்தவர்கள் தலைவரை

தொடர்ச்சி 15ம் பக்கம்...

14ம் பக்கத் தொடர்ச்சி...

சந்தித்து பேசி மீண்டும் என்னிடம் கூறியமையே கட்சியில் நான் இணைவதற்கு காரணமாக அமைந்தது.

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மவ்லானா இருக்கிறார். அவருக்கும் உங்களுக்குமான உறவு எப்படி இருக்கிறது?**

பதில்: மிக நன்றாக இருக்கிறது. மிகவும் அன்பாகவும், நெருக்கமாகவும், எல்லா அம்சங்களிலும் இணைந்து செயல்படும் வகையிலும் இருந்து கொண்டிருக்கிறோம். வரும் தேர்தலில் நாங்கள் இருவரும் இணைந்து வெற்றி பெறுவதற்கான திட்டங்களையும் தீட்டி வருகிறோம். கண்டிப்பாக இருவரும் வரும் தேர்தலில் வெற்றி பெறுவோம் அந்த எந்தவித மாற்றமும் கிடையாது.

**கேள்வி: வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க அவர்களும், சஜித் பிரேமதாச அவர்களும் இணைந்து போட்டியிட்டால், பெரும்பான்மை அளவில் வெற்றி வாகை சூட வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுவது பற்றி உங்களுக்கு கருத்து என்ன?**

பதில்: அவ்விருவரும் ஜனாதிபதி தேர்தலில் இணைந்து போட்டியிட்டால், பெரிய அளவில் எதிர்ப்பு எதுவும் இருக்காது என்பது திண்ணம். ஆனால் அப்படி அவர்கள் இணைந்து போட்டியிடுவது சாத்தியமானதுதானா என்பதுதான் கேள்வி.

**கேள்வி: அப்படி அவ்விருவரையும் இணைப்பதற்கு, ரணில் அவர்களுடன் தங்களுக்குள்ள நெருக்கமான உறவைப் பயன்படுத்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் ஒப்புதலுடன், நீங்கள் முயற்சியில் இறங்குவீர்களா?**

பதில்: சஜித் பிரேமதாசவைப் பொருத்த வரை, ரணில் அவர்களுடன் இணைந்து போட்டியிடுவது பற்றிய எந்த முன்மொழிவையும் அவர் ஏற்றுக்கொண்டதாகவோ, அது பற்றி ஆதரவாக எதையும் பேசியதாகவோ எனக்குத் தெரியவில்லை. எனவே அதில் அவரது விருப்பம் எப்படி இருக்கும் என்று சொல்ல இயலவில்லை.

**கேள்வி: அப்படி பெரிய கட்சிகள் அல்லது பெரிய தலைவர்கள் இணைந்து போட்டியிட வாய்ப்பில்லை என்றால், பன்முனைப் போட்டி ஏற்பட்டு, அதனால் வாக்குகள் சிதறிப் போக வாய்ப்புள்ளது அல்லவா?**

பதில்: நிச்சயமாக வாக்குகள் சிதற வாய்ப்புள்ளது என்றாலும், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ஒத்த கருத்துடையவர்கள் இணைந்து ஆட்சியை நடத்துவர். அண்மைக்காலமாகவே, தனியொரு கட்சி அருதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பது என்பது கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டது. இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் இணைந்துதான் ஆட்சி அமைத்து வருகின்றன. இந்தத் தேர்தலிலும் அதுதான் என்ற சூழல் உள்ளது.

**கேள்வி: வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் மட்டுமாவது ஓரணியில் இணைந்து செயல்பட வாய்ப்புள்ளதா?**

பதில்: இலங்கையில் முஸ்லிம்கள் நடத்தும் கட்சிகள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது. அமைச்சர் அதாவுல்லாஹ் அவர்களது கட்சி, அமைச்சர் ரிஷாத் பதீயுத்தீன் அவர்களது கட்சி என மூன்று கட்சிகள் உள்ளன. இவர்களெல்லாம் இணைந்து போட்டிடுவார்களா என்று இப்பொழுதே சொல்லிவிட முடியாது. ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவாரா என்றோ, அவர் யாரோடு சேர்ந்து போட்டிடுவார் என்றோ இப்பொழுது சொல்லிவிட முடியாது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருக்கும் சூழலில், யார் யார் வேட்பாளராக நிறுத்தப்படுவர், எந்தெந்தப் பகுதிகளில் நிறுத்தப்படுவர் என்று எதையுமே இப்பொழுது சொல்லிவிட முடியாது.

தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரியும் சூழலில் மட்டும்தான் இது போன்ற கூட்டணி உடன்படிக்கைகள் சாத்தியமாகும்.

**கேள்வி: மட்டக்களப்பு கேம்பஸ் என்று சொன்னீர்கள்... அதன் தனித்துவம், சிறப்பம்சம் என்ன என்று கூற முடியுமா?**

பதில்: இந்தியாவில் அரசு பல்கலைக்கழகங்கள் ஏராளமாக இருப்பதைப் போலவே தனியார் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் மிக அதிக அளவில் எல்லா பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் இலங்கையைப் பொருத்தமட்டில் அப்படி இல்லை. இலங்கையில் சொற்பமான பல்கலைக்கழகங்கள் மட்டுமே உள்ளன. அவையும் அரசு பல்கலைக்கழகங்களாகவே உள்ளன. தனியார் பல்கலைக்கழகம் என்பது இலங்கையில் மிக மிகச் சொற்பம்தான். அவற்றிலும் பயிலக்கூடிய மாணவர்கள் 200 முதல் 300 வரையிலானவர்கள்தான். மொழி, மத, இன வேறுபாடுகள் இன்றி, எல்லோருக்கும் கல்வி அளிக்கும் திட்டத்துடன் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு கெம்பஸ் உடைய நல்ல நோக்கத்தின் மீது தேவையற்ற விமர்சனங்கள் உருவாக்கப்பட்டு, கடந்த ஆட்சியில் அது தடை செய்யப்பட்டது. தற்பொழுது அதன் நியாயம் உணரப்பட்டு, இந்த ஆட்சியில் தடை நீக்கப்பட்டு மீண்டும் முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பொறியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம், ஆரோக்கிய அறிவியல் ஆகிய பாடத்திட்டங்களை உள்ளடக்கி இப்பொழுது அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. Applied information technology, Artificial intelligence, Cyber crime போன்ற பாடத்திட்டங்களை நடத்துவதற்கும் விண்ணப்பிக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் அது சந்தித்த நடைமுறைச் சிக்கல்கள், சீர்கேடுகள் அனைத்தும் களையப்பட்டு, மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 700 மாணவ – மாணவியர் பயின்று வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு தனி பயிற்றுநர் நியமிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இன்னும் இரண்டு வாரங்களில் ஆயசநைெ, ஊஎைடை, ஆநஉாயடைெயட, நுடநஉவசைடையட யனெ நுடநஉவசழெைஉள உள்ளிட்ட என ஐந்து பொறியியல் பிரிவு பாடத்திட்டங்களைக் கொண்டு வரவிருக்கிறோம். அதற்கான அரசு ஒப்புதலையும் பெற்றிருக்கிறோம். அனைத்துக்கும் தேவையான ஆய்வகங்களும், ஆடிட்டோரியம் உள்ளிட்ட சகல வசதிகளுடன் ஏற்படுத்தப்பட உள்ளன. மொத்தத்தில், இந்த ஆண்டில் எப்படியும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கி பாடங்களை நடத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்கான முயற்சிகளும், முன்னெடுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், நவீன தேவைகளுக்கு ஏற்ப வசதிகள் என சகல வசதிகளோடும் இந்தப் பல்கலைக்கழகம் இயங்கவிருக்கிறது. இப்பொழுது 650 மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயின்று வருகின்றனர். அவர்களுக்கு விடுதியில தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூப்பர் மார்க்கெட், கஃபே, மெடிக்கல் சென்டர், சலூன், விளையாட்டுத் துறைக்குத் தேவையான அனைத்து அம்சங்கள், உடற்பயிற்சிக்கான ஜிம் என மொத்தம் 100 ஏக்கர் நிலப்பரப்பில், இலங்கையில் எந்த அரசுப் பல்கலைக்கழகத்திலோ அல்லது தனியார் பல்கலைக்கழகத்திலோ இதுவரை இல்லாத அளவுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன் கொடுக்கப்படவும் இருக்கின்றன.

**கேள்வி: எத்தனை பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர்?**

பதில்: 700 மாணவர்கள் கற்கும் இப்பல்கலைக்கழகத்தில் 100 பீ.எச்.டி. பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர். எங்களது வருங்காலத் திட்டமெல்லாம் – விடுதியில் தங்கி 10 ஆயிரம் மாணவர்களும், வெளியிலிருந்து வந்து செல்லும் வகையில் 10 ஆயிரம் மாணவர்களும் என மொத்தம் 20 ஆயிரம் மாணவ – மாணவியர் இங்கு வந்து பயில வேண்டும் என்பதுதான். அந்த இலக்கை நோக்கிதான் எங்களது நடவடிக்கைகளும் சென்று கொண்டிருக்கின்றன. இந்த இலக்கை நோக்கிய பயணத்தில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 1,000 கூடுதல் மாணவர்கள் தங்கும் வகையில் வசதிகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன

**கேள்வி: இலங்கையில் இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இந்தியாவில் இயங்கி வரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பது பற்றி உங்களது கருத்து என்ன?**

பதில்: இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் மர்ஹூம் கண்ணியமிக்க காயிதேமில்லத் முஹம்மது இஸ்மாயில் இருக்கும் காலத்தில் இப்படி ஒரு நெருக்கமான உறவு அமைய வேண்டும் என எங்களது மறைந்த தலைவர் அஷ்ரஃப் அவர்களது காலத்திலேயே அவர் பெரிதும் விரும்பினார். எங்களது கட்சியின் உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் கூட இந்தியாவுக்கு அனுப்பி, மக்கள் நலப் பணிகளை எப்படி அங்கு மேற்கொள்கின்றனர் பிரச்சனைகளை எப்படி சாதுர்யமாகக் கையாண்டு தீர்வு காண்கின்றனர் என்பன குறித்தெல்லாம் அறிய திட்டம் வைத்திருந்தார். ஆனால் அது உடனடியாக சாத்தியப்படவில்லை. தற்போதைய எங்கள் தலைவர்ரவூப் ஹக்கீம் அவர்கள், அந்தக் குறையைப் போக்கும் வகையில், இந்தியாவில் அனைத்து அரசியல் தலைவர்களோடும் – குறிப்பாக தமிழ்நாட்டில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களோடு மிக நெருக்கமான உறவை வைத்திருக்கிறார். இப்படியான நல்ல உறவு மூலம் அங்கு இருக்கக்கூடிய நல்லவற்றை நாங்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ள முடியும். அது போலவே, எங்களிடம் இருக்கும் நல்லவற்றை அங்குள்ளவர்களும் எடுத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது. இது ஒருவருக்கொருவர் பரஸ்பரம் செய்து கொள்ளக்கூடிய உதவி. சிறப்பான இந்த அறிமுகத்தைக் கொண்டு ஒருவர் இன்னொருவரின் நாட்டில் சகஜமாக தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அந்த வகையில் இந்த உறவு என்றென்றைக்கும் நீடித்து நிலைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

அதேபோல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் செயல்பாடு குறித்து நன்கு அறிவேன். அவர்களுடைய அரசியல் பணிகளை மற்றும் சமூக சார்ந்த பணிகளை நிதானமாகவும் கொண்டு செல்கிறார்கள். அதேபோல் போல தான் எங்களுடைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் இலங்கையில் கட்சியின் பணிகளைச் செய்து வருகிறார் இவ்வாறு அவர் சிறப்பு பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் கொழும்பிலிருந்து வெளிவரும் உதயம் நாளிதழ் என்னை நேர்காணல் ஒன்றிற்காக எனது கொழும்பு இல்லம் வந்திருப்பதையிட்டு திருச்சி எம்.கே. சாகஹுல் ஹமீதுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, உதயம் நாளிதழின் பிரதம ஆசிரியர் எம். என். அமீன் மற்றும் உதயம் நாளிதழின் செய்தி பிரிவை சேர்ந்த அனைத்து நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக கூறினார்.

# வரலாற்றில் சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்த அமானா வங்கி

Amãna Bank
It's Your Bank

வரிக்கு முந்திய இலாபம் 92% இனால் அதிகரித்து ரூ. 2.3 பில்லியனாகவும் வரிக்கு பிந்திய இலாபம் 76% இனால் அதிகரித்து ரூ. 1.4 பில்லியனாகவும் பதிவு

சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும் அமானா வங்கி இதுவரையில் பதிவு செய்திருந்த உறுதியான நிதிப் பெறுபேறுகளை 2023 ஆம் ஆண்டில் எய்தியிருந்தது. அதனூடாக, வங்கியின் உறுதித் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், மீட்சி மற்றும் அதிகரித்துச் செல்லும் ஏற்றுக் கொள்ளல் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளன. வங்கியின் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் சுமார் இரண்டு மடங்காக அதிகரித்து ரூ. 2.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 1.2 பில்லியனிலிருந்து சுமார் 92% வருடாந்த அதிகரிப்பை பெற்றிருந்தது. 2023 ஆம் ஆண்டுக்கான வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 1 பில்லியன் எனும் பெறுமதியை கடந்து ரூ. 1.4 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 0.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 76% வருடாந்த அதிகரிப்பாகும்.

பிரதான வியாபாரத்தில் உறுதியான வளர்ச்சியுடன், வங்கியின் நிதிசார் வருமானம் ரூ. 17.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 12.1 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 42% அதிகரிப்பாகும். ஆரோக்கியமான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.3% ஐ வங்கி பேணியிருந்ததுடன், தேசிய நிதியளிப்பு வருமானமாக ரூ. 6.5 பில்லியனை வங்கி பதிவு செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 4.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 36% அதிகரிப்பாகும்.

கட்டண அடிப்படையிலான வருமானமும் 24% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 931 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், எமது பெறுமதி வாய்ந்த வியாபார வங்கியியல் வாடிக்கையாளர்களால் உருவாக்கப்பட்ட வர்த்தகங்கள், டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிப்பு மற்றும் இதர பெறுமதி சேர் சேவைகள் போன்றன பங்களிப்பு வழங்கியிருந்தன. உயர் தேறிய வர்த்தக வருமானம் மற்றும் இதர வருமதிகளின் பங்களிப்புடன், வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 9.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 6.4 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 45% வளர்ச்சியாகும்.



சந்தை சூழ்நிலைகள், வங்கியின் முற்கொடுப்பனவு பிரிவு மற்றும் உயர் கடன் இருப்புகளை சீராக பேணுவதற்கான தேவை போன்றவற்றை கவனத்தில் கொண்டு ஆண்டின் மதிப்பிறக்க கட்டணங்கள் ரூ. 2.1 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் ரூ. 1.6 பில்லியனாக காணப்பட்டது. இது 29% அதிகரிப்பாகும். மதிப்பிறக்க கட்டணங்களில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், தேறிய தொழிற்பாட்டு வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 4.7 பில்லியனிலிருந்து 50% அதிகரித்து ரூ. 7.1 பில்லியனாக உயர்ந்திருந்தது.

பணவீக்க அழுத்தம் நிலவிய போதிலும் வருமானத்துக்கான செலவு விகிதத்தை 42மூ எனும் மேம்பட்ட ஆரோக்கியமான நிலையில் பேணி, நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரிக்கு முன்னதான தொழிற்படு இலாபத்தை ரூ. 3.2 பில்லியனாக பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 85மூ அதிகரிப்பாகும். வங்கியின் திரண்ட வரிப் பங்களிப்பான ரூ. 1.8 பில்லியன் என்பது, வங்கியின் வரிக்கு முன்னதான தொழிற்படு இலாபத்தின் 57% ஆக காணப்பட்டது.



மேலும், சந்தையில் நிதிக்கு கடுமையான போட்டி மற்றும் நெருக்கமான சந்தை திரள்வு சூழல்கள் போன்றவற்றிலும், உறுதியான வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் வங்கியின் பெறுமதி சேவைகளுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வி, வைப்பு பரவலாக்க செயற்பாடுகள் போன்றவற்றில் அதிகளவு ஈடுபாடு பதிவாகியிருந்தது. அதன் பெறுபேறாக, வங்கியின் வைப்பு பிரிவு 18% இனால் அதிகரித்து ரூ. 132.9 பில்லியனாக பதிவாகியிருந்தது. தொழிற்துறையில் உயர் CASA விகிதமான 40% ஐயும் பேணியிருந்தது.

ரூ. 150 பில்லியன் எனும் பெறுமதியை கடந்து வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 17.8 பில்லியனினால் உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் ரூ. 141.7 பில்லியனாக காணப்பட்ட இந்தப் பெறுமதி 13% வருடாந்த அதிகரிப்பை பதிவு செய்து ரூ. 159.5 பில்லியன் எனும் உறுதியான பெறுமதியை பதிவு செய்திருந்தது.

2023 ஆம் ஆண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்த நிலையில், ஆண்டின் பிற்பகுதியில் ரூ. 6 பில்லியன் மூலதன உள்ளீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், அமானா வங்கியின் சுழுநு பெறுமதி 5.6% இலிருந்து 7.7% ஆக வளர்ச்சியடைந்திருந்தது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று, அமானா வங்கியின் பொது பங்கு நிலை 1 மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் முறையே 16.5% மற்றும் 19.3% ஆக ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான முறையே 7% மற்றும் 12.5% ஐ விட உயர்வாக காணப்பட்டன..

வங்கியின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், "பெருமளவு சவால்களுக்கு மத்தியில் தனது மீட்சி மற்றும் இயங்கும் திறனை உறுதி செய்து, 2023 ஆம் ஆண்டை அமானா வங்கி, வரலாற்றில் பதிவாகிய சிறந்த நிதிப் பெறுபேறுகள் அடங்கலாக பல வரலாற்று சாதனைகளுடன் நிறைவு செய்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எமது மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியியல் வழிமுறைக்கான ஏற்றுக் கொள்ளல் அதிகரித்துச் செல்வதை இந்த சாதனைகள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன், எமது பங்காளர்கள் எம்மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றது. எனது சக பணிப்பாளர்கள், நிர்வாகத்தார் மற்றும் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள், பங்காளர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். வளர்ந்து வரும் இந்த தொழிற்துறைக்கு நாம் தலைமைத்துவமளிக்கும் நிலையில், எதிர்காலத்தை உறுதியாக எதிர்கொள்வதற்கு அமானா வங்கி தயாராகவுள்ளது." என்றார்.

வங்கியின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில்,

"2023 என்பது அமானா வங்கிக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில், வங்கியின் மீட்சி மற்றும் பங்காளர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்த எமது புதிய மூலதன உள்ளீட்டுடனான தூர நோக்குடைய வளர்ச்சித் திட்டங்களுடன் வங்கியின் அடிப்படைகள் வலுவூட்டப்பட்டதுடன், சிறந்த செயற்பாடுகளையும் பதிவு செய்ய முடிந்திருந்தது. சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள், கூட்டாண்மை மற்றும் சில்லறைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு தமது தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும், பொருளாதாரத்துக்கு பெறுமதி சேர்ப்பதிலும் வங்கி தொடர்ச்சியாக காண்பித்திருந்த ஆதரவின் காரணமாக இந்த வினைத்திறனை எய்த முடிந்தது. எமது தவிசாளர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர், ஊழியர்கள், பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பங்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மேம்படுத்தப்பட்ட மூலதன இருப்புடன், அமானா வங்கி வளர்ச்சியை நோக்கிய துரித பயணத்தை மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதுடன், எமது வியாபார விரிவாக்கங்கள், டிஜிட்டல் பிரசன்னம் மற்றும் நிலைபேறான வங்கிச் செயற்பாடுகள் போன்றவற்றில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'யுயுயு' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது.

வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# மனநலமும் ஆலோசனையும் 21

# நோன்பும் மூளை ஆரோக்கியமும்

மூளை மனித உடலின் மிகவும் முக்கியமான பகுதியாகும்.

இந்த உறுப்பு புத்திசாலித்தனத்தின் இருக்கையாகவும்,

புலன்கள் தரும் தகவல்களை சரியாக அடையாளம் காணும் கருவியாகவும்,

உடல் இயக்கத்தைத் ஆரம்பிக்கும் இடமாகவும்

நடத்தைகளை கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டாளராகவும் செயற்படுகிறது.

இப்படி பல வழிகளில் எமக்கு உறுதுணையாக இருக்கும் எமது மூளையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது எமது பொறுப்பு. மூளையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிகளில் மிக முக்கியமான ஒரு வழி நோன்பு நோற்பதாகும்.

நோன்பிருப்பது பொதுவாக நமது அனைத்து ஆரோக்கியத்திலும் அழகான மாற்றங்களை ஏற்படுத்துவது பற்றி நாம் அறிவோம். அதில் எங்கள் மூளையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் மிகவும் வித்தியாசமானவை. விசித்திரமானவை. இது பற்றி துறைசார் வல்லுனர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு முக்கிய தகவல்களை முன்வைக்கின்றனர்.

சுமார் ஆறு மணிநேரம் நோன்பின் பிறகு, எமது உடல் உபுஉ எனும் மனித வளர்ச்சி ஹார்மோன்களை அதிகமாக வெளியிடத் தொடங்குகிறது. இந்த ஹார்மோன் புரதத்தைப் பயன்படுத்துவதை விட கொழுப்பை எரிப்பதற்கு ஆதரவாக இருந்து வளர்சி மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எனவே புரதங்கள் பெரும்பாலும் பழுதடைந்த கலங்களை ஒழுங்கமைப்பு செய்வதுடன் மூளைக் கலங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பயன்படுகிறது. Human Growth Hormone (HGH) மனித வளர்ச்சி ஹார்மோன் உடலில் வீக்கத்தைக் குறைப்பதுடன் தன்னியக்கத்தை அதிகப்படுத்துவதைத் தூண்டுகிறது. தன்னியக்கவியல் என்பது பயன்படுத்தப்படாத அல்லது சேதமடைந்த கலக் கூறுகளை சுத்தம் செய்து மறுசுழற்சி செய்வதன் மூலம் நமது உயிரணுக்களின் ஆரோக்கியத்தையும் உயிர்வாழ்வையும் ஊக்குவிக்கிறது. மூளையில் இருந்து பெறப்பட்ட நியூரோட்ரோபிக் (BDNF) எனப்படும் புரதத்தின் அளவை நோன்பு அதிகரிக்கிறது. இந்த செயல்முறைகள் அனைத்தும் மூளையின் செயல்பாட்டில் நேர்மறையான விளைவைக் கொண்டிருக்கின்றன.

மூளையில் உருவாகும் இந்த மாற்றங்கள் அல்லது செயல்முறைகள் அனைத்தும் புரதச் சேமிப்பு, வீக்கத்தைக் குறைத்தல், தன்னியக்கச் செயற்பாடு என்பவற்றை சீராக்கி நமது மூளைக்கு பல நன்மைகளை கொண்டு சேர்க்கின்றன. ஒருபுறம், அவை மூளை கலங்களுக்கு (cell) ஏற்படும் சேதத்தை குறைக்கின்றன. எடுத்துக்காட்டாக, அழற்சி எதிர்வினைகளைக் குறைப்பதன் மூலமும், மூளையில் உள்ள கழிவுகளை அகற்றுவதன் மூலமும் மறுபுறம், அவை சரியான மூளை செயல்பாட்டைத் தூண்டுவதன் மூலமும் அத்துடன் கலங்களை பழுதுபார்ப்பதை ஊக்குவிப்பதன் மூலமும் புதிய மூளை காலங்களுக்கு இடையேயான இணைப்புகளை உருவாக்குவதன் மூலமும் பங்களிக்கின்றன.

அதேபோன்று மூளைக்குள் தகவல் தொடர்புகளை எளிதாக்கவும் செய்கிறது.

மேலும் இந்த புரதம் டிமென்ஷியா போன்ற முதுமையின் போது ஏற்படும் அறிவாற்றல் பிரச்சனைகள் அல்லது முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் சிக்கல்கள் உருவாகுவதை தடுக்கவும் செய்கிறது.

எனவே நோன்பு நரம்பியல் பாதிப்புகளுக்கு மருந்தாக இருக்கிறது என்பது பேருண்மை.

எனவே இளமை பருவத்தில் இருந்து அல்லது பிள்ளை பருவத்திலிருந்தே நோன்பு நோற்பது மூளையை ஆரோக்கியமாக வைக்கவும் வயோதிபத்தை அடையும் போது ஏற்படும் பல நரம்பியல் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பு பெறவும் காரணமாக இருக்கிறது என்பதையே ஆய்வாளர்கள் உறுதி செய்து இருக்கிறார்கள்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# வெகு விமரிசையாக நடைபெற்ற எம்.ஐ.எம் மொகிதீனின் வரலாற்று ஆய்வரங்கு










(அஷ்ரப் ஏ சமத், பரீட் இக்பால்)

எம்.ஐ.எம். மொஹிதீன் வரலாற்று ஆய்வரங்கு நிலையத்தில் வருடாந்த நிகழ்வு இலங்கை முஸ்லிம்களின் வரலாறுகள் என்ற தலைப்பில் சனிக்கிழமை 02. தபலாக கேட்போர் நிலையத்தில் பொறியிலாளர் ஜஹ்பர் எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. , நோக்க உரையை பேராசிரியர் எஸ்.ஏ.ஹூஸைன்மியா நிகழ்த்தினார். பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி சிறராஜ் மசூர், சிரேஸ்ட ஊடகவியலாளர் அசீப் ஹூசைன், பேராசிரியர் ராஜ் சேமதேவ, ஜெஸ்மில் அப்துல் ரஹ்மான், விரிவுரையாலர் ஜெசிமா ஹமீட், ஊடவியலாளர் பஹ்சான் நவாஸ், சமுக சிந்தனையாளர் சிறாஜ் மசூர், மற்றும் பேராசிரியர் நுஹ்மான், கலாநிதி எம். எஸ் அனீஸ் ஆகியோர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட உரைகளும் மேடையில் வாசிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பிணர் அலி சாஹிர் மௌலானா, ஏ.எச்.எம் பௌசி முன்னாள் பாராளுமன்ற உறுப்பிணர் எம்.எம். சுஹைர் உட்பட எம். ஐ.எம். மொஹிதீன் ஆய்வு நிலையத்தின் உறுப்பிணர்கள், மற்றும் சட்டக்கல்லூாரியின் மாணவர்கள் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மெஹிடீனின் எழுதிய பல்வேறு கட்டுரைகள் ஆய்வுகள் புள்ளிவிபரங்கள் ஆவனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கான மத்திய நிலையமொன்றும் அக்கரைப்பற்றில் இயங்கிவருகின்றன.

அத்துடன் இலங்கையில் வாழும் முஸ்லிம்களது வரலாறுகள் இந்த நாட்டுக்கு முஸ்லிம்கள் எவ்வாறு வந்தார்கள் பண்டைய காலத்தில் அரசர் காலத்தில் முஸ்லிம்கள் உதவிய வரலாறு நாட்டின் நன்மைக்காக உயிர் நீத்த முஸ்லிம்கள், வியாபாரம், முதல் காலடி வைத்த ஆதம் அலை, கரையோபிரதேச வாழ் முஸ்லிம்கள் வியபார நோக்கமாக இலங்கை வாழ்ந்த வரலறுகள் விரிவாக ஆய்வாளர்களாகல் எடுத்துக் கூறப்பட்டன.




பயாஸா பாஸில்

# கடும் வெப்பத்தை உணரும் உங்களுக்கு இதோ சில வழிகள்...!

- அதிகம் அதிகம் நீர் அருந்துங்கள். இளநீர் ,தேங்காய் தண்ணீர் , தேசிக்காய் பானம் , பழக் கலவை போன்ற நீராகாரங்களை பருகுங்கள்.

- வெளியில் செல்வதை முடிந்த அளவு குறைத்துக் கொள்ளுங்கள். ஒரே முறையில் எல்லா வேலைகளையும் செய்து கொண்டு வீட்டினுள் சென்று விடுங்கள்.

- ஒரு நாளைக்கு இருமுறை குளியுங்கள். மேனியையும் நனைத்துக் கொள்ளுங்கள்.

- வெளியில் செல்லும்போது தொப்பி அல்லது குடை பயன்படுத்துங்கள்.

- வெளியே நீண்ட நேரம் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் நிழலை தேடி அதன் கீழ் அமருங்கள்.



# இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து

பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கண்ணியமிக்கவர்கள். இஸ்லாம் எப்போதும் பெண்களை மதிக்கிறது. ஏனையோரையும் பெண்களை மதிக்கும்படி பரிந்துரைக்கிறது. அதனால் தான் பெண்களுக்கென்று தனியான சூறாவை அல்குர்ஆனில் ( அந்நிஸா) குறித்து வைத்துள்ளான். இறைவன். ஆண்களைப் போன்று பெண்களும் இபாதத்துக்களில் சமமான நன்மைகளை பெற்றுக்கொள்ள இஸ்லாம் வழி வகுத்துள்ளது.

தொழுகை , ஸக்காத் , நோன்பு , ஹஜ் போன்ற பிரதான கடமைகளோடு இன்னோரன்ன கடமைகளிலும் பெண்களுக்கு நன்மைகளை வழங்கியுள்ளது. திருமணத்தின் போதும் பெண்ணின் சம்மதம் நிச்சயம் பெறப்பட வேண்டும். பெண்ணின் சம்மதமின்றி வலுக்கட்டாயமாக திருமணம் செய்து வைக்கப்படல் கூடாது. அதற்கு இஸ்லாத்தில் அனுமதியும் கிடையாது.

தமக்கான கடமைகளை பெண்கள் செய்து முடிப்பது போலவே தமக்கான உரிமைகளையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். நிகாஹ்வைப் பொறுத்தவரையில் மஹர் பெண்ணின் உரிமை அதனை தன் விருப்பத்தின் பேரில் மணப்பெண் மணமகனிடமிருந்து பெற்றுக்கொள்ள இஸ்லாம் பூரண அனுமதி அளிக்கிறது.

இதேபோன்று ஒரு பெண் நபி அவர்களிடம் வந்து ஆண்கள் மஸ்ஜிதுக்கு செல்கிறார்கள். எம்மை விடவும் அதிகமான நன்மையான விடயங்களில் ஈடுபடுகிறார்கள். என்று முறையிட்ட போது நபியவர்கள் அப்பெண்ணிடம் கணவன்மாருக்கு பணிவிடை செய்து இறைவழியில் நன்மை பெற நாடுகின்ற பொழுது அதே நன்மை மனைவிமாருக்கும் கிடைக்கப்பெறும் என்றார்கள்.

கல்வியை தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை. தனக்கான கல்வியை பெற்றுக் கொள்வதோடு முடிவதில்லை. தனது கணவன் , குழந்தைகள் , குடும்பத்தார் என விரியும் , சமூகமாக பழகிப் பெருகும். கற்பதோடு கற்றுக் கொடுக்கவும் உட்படுவாள்.

பொருளாதார ரீதியிலும் ஒரு பெண் ஈடுபட முடியும் என இஸ்லாம் கூறுகின்றது. தொழில் கடமையில்லை ஆனால் விரும்பினால் செய்யலாம். மார்க்கம் சரீஆவிற்கு உட்பட்ட வகையில் பொருளாதார விடயங்களில் ஈடுபடலாம். கணவன் சம்பாதிக்கும் சொத்துக்கள் இருந்து செலவழிக்கலாம். சேமிக்கலாம். சொத்துப் பங்கீட்டிலும் ஒரு பெண்ணுக்கு பங்கு உண்டு என்பதை இஸ்லாம் அழகான முறையில் முன்வைத்துள்ளது.

".........இறந்து போன பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற பொருட்களிலிருந்து பெண்களுக்கும் பாகமுண்டு...."

( அந்நிஸா : 07 )

# 9ஆவது ரி20 உலகக்கிண்ணம் ஐசிசி இன் புதிய அறிவுறுத்தல்கள்



அரபாத் பஹுர்தீன்

எதிர்வரும் ஜுன் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்க நாடுகளில் இடம்பெறவுள்ள 9ஆவது ஆடவர் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத் தொடருக்கான மிக முக்கியமான சில அறிவுறுத்தல்களை சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்று (02) வெளியிட்டிருந்தது.

உலக கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தினை ஈர்த்துள்ள 9ஆவது ஆடவர் இருபதுக்கு இருபது தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்க நாடுகளின் 9 மைதானங்களில் இடம் பெறவுள்ளது. இதில் முதல் முறையாக 20 அணிகள் பங்கேற்கின்றன. ஏற்கனவே போட்டிகளின் அட்டவணைகள் போடப்பட்டு அணிகள் குழுக்கலாகப் பிரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்றைய தினம் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவை 9ஆவது இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத் தொடர் சம்பந்தமான மிக முக்கிய விடயங்களை இத் தொடரில் பங்கேற்கும் அணிகளுக்கு வழங்கியுள்ளது. அந்தவகையில் இவ் உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கவுள்ள 20 அணைகளும் தமது அணி வீரர்கள் விபரத்தினை எதிர்வரும் மே மாதம் 1ஆம் திகதிகு முன்னர் அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

மேலும் அவ்வாறு மே மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட அணி வீரர்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டும் என இருந்தால் மே மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் மாற்றம் செய்ய முடியும் என அறிவித்துள்ளதுடன் அதன் பின்னர் எந்த அணியும் எந்த வீரர்களையும் மாற்றம் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டுள்ளது. போட்டித் தொடரின் போது வீரர்கள் உபாதை அடைந்து அத் தொடரில் இருந்து வெளியேறும் பட்சத்தில் மாத்திரம் அணி வீரர்கள் குழாத்தில் மாற்றம் கொண்டுவர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒரு அணி இவ் உலகக்கிண்ணத் தொடருக்கு 15 வீரர்கள் அடங்கிய குழாத்தையே அறிவிக்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. அத்துடன் ஒரு அணி இரண்டு பயிற்சி ஆட்டங்களில் மாத்திரம் பங்கேற்க முடியும் எனவும் ஐசிசி குறிப்பிட்டுள்ளது. கிரிக்கெட் உலகம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் 9ஆவது ஆடவர் இருபதுக்கு இருபது தொடருக்கு இன்னும் 89 நாட்களே உள்ள நிலையில் முன்னனி அணிகள் தமது ரி20 அணியை தெரிவு செய்வதில் மிக அக்கறையோடு செயற்பட்டு வருகின்றனர். பங்களாதேஸ், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தத்தமது நாடுகளின் ரி20 தொடர்களை நடாத்தி வீரர்களை பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் இலங்கை அணி




தொடர்ச்சியாக ரி20 தொடர்களில் பங்கேற்று வருகின்றது. அந்தவகையில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ரி20 தொடரை வெற்றி கொண்டு நாளை பங்களாதேஸ் அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் சந்திக்கின்றது. இத் தொடர் இலங்கை அணியின் ரி20 உலகக்கிண்ணத்துக்கு சிறந்த ஆரம்பமாக அமையும் என எதிர்பார்க்கலாம்



## டிவிசன் 2 பாடசாலை உதைப்பந்தாட்ட தொடர்

# இறுதியில் கொழும்பு ரோயலை எதிர்கொள்ளும் கிண்ணியா அல் அமீன்

20 வயதிற்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலைகள் பங்கேற்கும் டிவிசன் 2 உதைப்பந்தாட்ட தொடரின் நடப்பு ஆண்டிற்கான இறுதிப் போட்டியில் கொழும்பு ரோயல் கல்லூரி அணியை எதிர்த்தாடவுள்ளது கிண்ணியா அல் அமீன் வித்தியாலய அணி.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் மேற்பார்வையில் 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான டிவிசன் 2 பாடசாலை உதைப்பந்தாட்டத் தொடர் கடந்த மாதம் ஆரம்பித்திருந்தது.







இதில் அனைத்து போட்டிகளும் விலகல் முறையில் இடம்பெற்றிருந்தது. அதற்கமைய முதலாம், இரண்டாம் மற்றும் காலிறுதி சுற்றுக்கள் முடிவில் 4 பாடசாலை அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகின.

அதற்கமைய கொழும்பு ரோயல் கல்லூரி, கிண்ணியா அல் அமீன் வித்தியாலயம் , நீர்கொழும்பு அல் பலாஹ் கல்லூரி மற்றும் கிண்ணியா மத்திய கல்லூரி ஆகிய 4 அணிகள் இவ்வாறு டிவிசன் 2 இன் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

அத்துடன் டிவிசன் 2 இல் இருந்து இவ் 4 பாடசாலை அணிகளும் இலங்கையின் முன்னணி பாடசாலை அணிகள் பங்கேற்கும் டிவிசன் 1 தொடருக்கு தமது வருகையை உறுதிப்படுத்தி அசத்தியிருந்தது.

அந்தவகையில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் கிண்ணியா அல் அமீன் வித்தியாலய அணி, நீர்கொழும்பு அல் பலாஹ் கல்லூரி அணியை எதிர்த்தாடியது. கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நீர்கொழும்பு அல் பலாஹ் கல்லூரி அணியை கோல் மழையில் நனைய வைத்த கிண்ணியா அல் அமீன் வித்தியாலய அணி 6:1 என்ற கோல்கள் வித்தியாலயத்தில் வெற்றி பெற்று முதல் முறையாய் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பின்னர் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொழும்பு ரோயல் கல்லூரி அணி கிண்ணியா மத்திய கல்லூரிஅணியை எதிர்கொண்டது. மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியின் முழு நேர ஆட்டத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலினை பதித்திருக்க வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி உதை வழங்கப்பட்டது அதில் கொழும்பு ரோயல் கல்லூரி அணி 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி கொண்டு இரண்டாம் அணியாக மாபெரும் தீர்மானமிக்க இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.




இதற்கமைய கிண்ணியா அல் அமீன் வித்தியாலய அணிக்கும் , கொழும்பு ரோயல் கல்லூரி அணிக்கும் இடையிலான தீர்மானமிக்க இறுதிப் போட்டி எப்போது, எந்த மைதானத்தில் மற்றும் எந்த நேரத்தில் நடாத்தப்பட உள்ளது என இதுவரையில் அறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொள்ளந்தலுவ வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்றது ஸம்ஸ் இல்லம்







(ஏ.எம்.எம். இப்ராஸ்)

குருநாகல் மாவட்டத்தின் நிகவரட்டிய கல்விக் கோட்டத்திற்குப்பட்ட கொல்லந்தழுவ முஸ்லிம் வித்தியால யத்தின் நடப்பு ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டியில் 128 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஸம்ஸ் இல்லம் முதல் இடத்தை தனதாக்கியது.

சுமார் 07 வருடங்களுக்குப் பின்னர் கொல்லந்தழுவ முஸ்லிம் வித்தியாலயத்தில் இந்த வருடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சி கொல்லந்தழுவ எனும் எழில்மிகு கிராமத்தில் வெகு விமர்சையாக நடை பெற்று முடிந்தன.

சொற்ப அளவிலான மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையின் மாணவர்கள் ஸம்ஸ் மற்றும் கமர் என இரு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் தங்களது திறமைகளை வெளிக்காட்டினர்.

இறுதிநாள் நிகழ்வுகளில் பழைய மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரும் இணைந்து வெகு விமர்சையாக நடாத்தி முடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.